தொழில்சார் கல்வி

# சமுதாய வளர்ச்சி




120105

இடைநிலை ஆசிரியர் கல்விப் பாடநெறி

**செயற்குழு**

எச். சீ. ஏ. ரி. ஜெயசேகரா
ஆர். ஆர். அயவர்தன
சி. புலேந்திரன்
வை. எல். ஏ. வஹாப்
தி. கணகரத்தினம்
வீ. இராசேயா
எஸ். கிருஷ்ணபிள்ளை
ஏ. சிவராசா
சீ. கருணதாசா

92/01/11

# சமுதாய வளர்ச்சி

தொலைக் கல்வித் துறை
தேசிய கல்வி நிறுவகம்

| | |
|---|---|
| **தொழில்சார் கல்வி** | **1201** |
| **சமுதாய வளர்ச்சி** | **120105** |

**பொருளடக்கம்** **பக்கம்**


0.0 அறிமுகம் . . . . . . . . . . . . . . . 03

1.0 குறிக்கோள்கள் . . . . . . . . . . . . . . 07

2.0 முற்சோதனை . . . . . . . . . . . . . . 07

பகுதி - 1

3.0 குடும்பம் என்னும் சமுதாயத்தில் ஏற்படும் சமுதாய வளர்ச்சி . . . . . . . . . . . . . . . . . 08

பகுதி - 2

4.0 சமுதாய வளர்ச்சியும், பிள்ளையின் பரந்த சமுதாயச் செயல்களும் . . . . . . . . . . . . . . 12

பகுதி - 3

5.0 பரந்த சமுதாயத்திற் பிள்ளை பெறும் சமுதாயவளர்ச்சி 15

பகுதி - 4

6.0 புதிய வாலிப வயது . . . . . . . . . . . 23

7.0 சுருக்கம் . . . . . . . . . . . . . . . 29

8.0 சோதனை . . . . . . . . . . . . . . . 30

9.0 ஒப்படை . . . . . . . . . . . . . . . 32

10.0 விடைகள் . . . . . . . . . . . . . . 36



© 1990—தேசியக் கல்வி நிறுவகம்



பதிப்பு 1:2

# 0.0 அறிமுகம்

உடல் வளர்ச்சி பற்றிய மொடியூலில் நீங்கள் குழந்தையின் உடல் வளர்ச்சி பற்றிக் கற்றுள்ளீர்கள்.

கற்றுக் கொண்டதன் பின், குழந்தைகளின் உடல் வளர்ச்சியை அவதானித்தீர்களா?

அப்படியானுல் ஆறு வயதுப் பிள்ளைகட்கும், 12 வயதுப் பிள்ளைகட்கும் இடையில் உடல் வளர்ச்சியின் தன்மை எவ்வாறு உள்ளதென்பதை அவதானித்தீர்களா?

இவ்விரு குழுக்களுக்கிடையேயும் உடல் வளர்ச்சியிலே நீங்கள் கண்ட மாற்றங்களெவை?

இரண்டாவது குழு முதலாவது முழுவிலும் பார்க்க உயரத்திலும் நிறையிலும் அதிகம் கூடியதா?

உங்களவதானிப்பின் அடிப்படையில் இவ்வட்டவணையை நிரப்புங்கள்

| உடல் வளர்ச்சி | புலனியக்க வளர்ச்சி | | | |
|---|---|---|---|---|
| | உயரம்: செ.மீ. (.......)<br>நிறை: கி.கி. (......) | இறப்பர் பந்தை வீசும் தூரம் | தூரம் பாய்ச்சலளவு | நின்ற இடத்தில் உயரப்பாய்தல் (தனிக்காலில்) நேரம் |
| **6 வயதுடைய பிள்ளை (ஒரே பாலில்)**<br>1. ..........................<br>2. .......................... | ..........<br>.......... | ..........<br>.......... | ..........<br>.......... | ..........<br>.......... |
| **12 வயதுடைய பிள்ளை (ஒரே பாலில்)**<br>1. ..........................<br>2. .......................... | ..........<br>.......... | ..........<br>.......... | ..........<br>.......... | ..........<br>.......... |

எல்லாப் பிள்ளைகளினதும் வளர்ச்சியும், முதிர்ச்சியும் சமமாகவே உள்ளனவா?

பாலியல் ரீதியாகவும் பொதுவாகவும், வளர்ச்சியும் முதிர்ச்சியும் வேறுபட்டுள்ளதை நீங்கள் அவதானித்தன் மூலம் விளங்கியிருப்பீர்கள்.

வளர்ச்சியும் முதிர்ச்சியும் அடையும் பிள்ளை, உடல் அவயங்கள் என்பவற்றில் மட்டுமல்ல சமுதாய ரீதியாகவும் வளர்ச்சியும் முதிர்ச்சியு மடைகிறது.

ஒரு மாணவன் சமூகமயமாக்கலில் வளர்ச்சியடையும் விதம் பற்றிக் கற்பதில் உங்களது கவனம் ஈர்க்கப்பட்டுகிறது.

பிள்ளையின் உடல் வளர்ச்சியை அவதானித்ததுபோல் பிள்ளையின் சமுதாய வளர்ச்சியின் போக்கினையும் அவதானிக்க முடியும்.

• கீழ்வரும் அவதானிப்பின் மூலம் பிள்ளையின் சமுதாய வளர்ச்சி எவ்வாறுளது என்பதை உங்களாலேயே விளங்கிக் கொள்ள முடியும்.

பிள்ளையொன்று பாடசாலையிலே கழித்த முதலாவது வாரத்தை நினைவு கூர்வதற்கு முயலுங்கள். பாலர் கீழ்ப்பிரிவு மாணவர்களில் ஒருவரை அவ்வாறு நினைவுகூர்ந்து, கீழ்வரும் கூற்றுக்கள் பொருத்தமானால் "✓" அடையாளமிடுங்கள். உங்களுக்கு ஞாபகம் பொருத் வரும் வேறு யாதேனும் நடத்தைகளிருந்தால் அவற்றையும் சேர்த் துக்கொள்ளுங்கள்.

அ. குழுவிலே இருப்பதற்கு விரும்பாமல் அழுது புலம்பு கிறது. ☐

ஆ வகுப்பில் நுழைவதற்கு மறுக்கிறது. ☐

இ ஆசிரியையோடு பேச மறுக்கிறது. ☐

ய வகுப்பில் சமவயதுக் குழுக்களோடு பேசுவதில்லை. ☐

உ கொஞ்ச நேரத்தில் சமவயதுக் குழுக்களோடு சிநேகமாகிவிடுகிறது. ☐

ஊ வீட்டைப்பற்றி நினைத்துக் காலத்தைக் கடத்துகிறது. ☐

உங்களுக்கு ஞாபகமுள்ள வேறு யாதேனும் நடத்தைகள் இருந்தால், அந்த நடத்தைகளையும் சேர்த்துக் கொள்ளுங்கள்.

. . . . . . . . . . . . . . . . . . . .

. . . . . . . . . . . . . . . . . . . .

. . . . . . . . . . . . . . . . . . . .

மூன்று மாதங்களுக்குப் பின் இப்பிள்ளையின் நடத்தைப் போக்கை நினைவு கூருங்கள். பொருத்தமானவைகளுக்கு "✓" அடையாள மிடுங்கள்.

அ ஆசிரியையோடு பேசுகிறது. ☐

ஆ அண்மையிலுள்ள சமவயதுக் குழுக்களோடு பேசு கிறது. ☐

இ வகுப்புல் எல்லாப் பிள்ளைகளுடனும் சிநேகமாக இருக்க விருப்பமற்றதாக இருக்கிறது. ☐

ஈ வகுப்பில் குழுக்களோடு சிநேகமாகத் தொழிற்படு கிறது. ☐

உ	வேறு யாதேனும் அவதானிப்புக்களிருந்தால் அவற்றையும் குறித்துக் கோள்ளுங்கள்

. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .

. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .

பாடசாலையில் இரு தவணைகள் கழிந்ததன் பின், இப்பிள்ளை விளையாட்டிடத்தில் நடந்து கொண்ட விதத்தை ஞாபகப்படுத்துங்கள். பொருத்தமானவைகளை "✓" என அடையாளமிடுங்கள்.

- அ குழுவினரோடு விளையாட விருப்பமற்றுக் காணப்படுகிறது. ☐
- ஆ குழுவினரோடு சேர்ந்து விளையாடுகிறது. ☐
- இ ஆசிரியையோடு விளையாட விருப்பம் காட்டுகிறது. ☐
- ஈ விளையாட்டிடத்தில் சண்டித்தனமான நடத்தைகளைக் காட்டி ற்றவர்களோடு குழப்பம் விளைவிக்கிறது. ☐
- உ வேறு யாதேனும் நடத்தைப் போக்குகளிருந்தால் அவற்றையும் குறிப்பிடுங்கள்.

. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .

. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .

. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .

ஆசிரிய கலாசாலையில், "பிள்ளையின் சமுதாய வளர்ச்சி" என்ற தலைப்பில் நிகழ்ந்த உரையின் பின், பாடசாலையிற் பயிற்சியில் ஈடுபட்டிருக்கும் காலத்தில், நாங்களும் மாணவர் குழுவும் கீழ் வரும் அவதானிப்புக்களில் ஈடுபட்டோம். பிள்ளையின் சமுதாய வளர்சி பற்றிய மூன்று சந்தர்ப்பங்களில் அவதானிப்புக்களை மேற்கொண்டோம். அவதானித்த சந்தர்ப்பங்களும், அவதானித்தவைகளும் கீழே தரப்படுகின்றன.

நேரம்: மு. ப. 10.00 மணி - தேனீர் வேளை.
வகுப்பு: 1 ஆம் வபுகுப்பு.
அவதானிப்பு: ஆசிரியரின் உதவியோடு தனித்தனியாகத் தேனீர் அருந்தினுர்கள். மாணவர்கள் சிலருக்கு உதவி செய்வதற்காக மூத்த சகோதரிகள் வந்திருந்தார்கள்.

நேரம்: மு. ப. 10.00 மணி - தேனீர் வேளை.
வகுப்பு: 3 ஆம் வகுப்பு.
அவதானிப்பு: மற்றவர்களுடனும் உணவைப் பகிர்ந்து கொண்டு சாப்பிடுவதற்கு விருப்பம் காட்டினுலும், தாமே அவைகளைச் சாப்பிடுவதில் அதிக விருப்பம் உள்ளவர்களென விளங்கக் கூடியதாகவிருந்தது.

. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .

. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .

நேரம்: மு. ப. 10.00 மணி - தேனீர் வேளை.
வகுப்பு: 5 ஆம் வகுப்பு.
அவதானிப்பு: மற்றவர்களோடு உணவுகளைப் பரிமாறிச் சாப்பிடுவதற்கு விருப்பத்தை வெளிப்படுத்தினர்.

நீங்களும் இவ்வாறான அவதானிப்புக்களை மேற்கொள்வதற்கு விரும்புகிறீர்களா? நீங்கள் சில அவதானிப்புக்களை மேற்கொண்டு பிள்ளைகளின் சமுதாய வளர்ச்சி பற்றிய விளக்கங்களைப் பெற்றுக் கொள்ளுங்கள். வேறுபட்ட வயதுக் குழுவினர்களிடையேயுள்ள நடத்தைப் போக்குகளின் மாற்றங்கள், அவர்களது சமுதாய வளர்ச்சியின் அளவினை விளக்குவதாக அமையும்.

சிறு குழந்தை தாயுடன் சிரிக்கிறது. கைகளை மேலே உயர்த்தித் தனது மகிழ்ச்சியைத் தெரிவிக்கிறது.

சிறு குழந்தை மற்றவர்களிலும் பார்க்கத் தாயை வேறுபடுத்தி அறிந்து கொள்ளும் பருவமே இதுவாகும். இது குழந்தையின் சமுதாய வளர்ச்சியைப்போல, அறிவு வளர்ச்சியினதும் ஆரம்பக் கட்டமாகும். சமுதாய வளர்ச்சியும், அறிவு வளர்ச்சியும் மிக நெருக்கமாக நடைபெறும் இரு அம்சங்கள். இவ்வளர்ச்சிகளை வெவ்வேறாகப் பிரித்துக் காட்டுவது மிகக் கடினமாகும். ஆயினும் எங்களது வசதிக்காக சமுதாய வளர்ச்சியினைப் பின்வருமாறு வரையறுத்துக் கூறலாம்.

| |
|---|
| சமுதாய வளர்ச்சி என்பது பல்வேறுபட்ட சந்தர்ப்பங்களில் நிகழ்ந்த சமுதாயச் செயற்பாடுகளின் விளைவுகளேயாம். |

வளர்ச்சி ஏற்படுவது சமுதாயத் தொழிற்பாட்டின் விளைவினாலேயாகும். முறையானதும் முறையற்றதுமான குழுக்களிடையே நிகழும் சமுதாயத் தொழிற்பாட்டினது விளைவே சமுதாய வளர்ச்சியாகும். தனிப்பட்டவரின் ஆளுமையிலும் இவ்வாறான முறையான, முறையற்ற குழுக்கள் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன.

சமுதாய வளர்ச்சியைத் தேவையின் பொருட்டே ஏற்படுத்திக்கொள்ள முடியுமா? அவர்களது சமவயதுக் குழுவினரோடு சிநேக பூர்வமாக வாழ்வதற்கு எங்களது மாணவர்களுக்கு நாங்கள் உதவி செய்ய முடியுமா?

பிள்ளையினுடல், அறிவு, உணர்வுகளின் வளர்ச்சியோடு பொருந்தும் முறையில் ஒழுங்குபடுத்தப்பட்ட சமுதாயத் தொழிற்பாடுகளின் தொகுப்பினால், சமுதாய வளர்ச்சியை ஏற்படுத்த முடியும். அப்படியானால் ஆசிரியர் என்ற முறையில் அவர் பிள்ளையின் சமுதாய வளர்ச்சியைப் பொறுத்து முக்கிய பங்களிப்புகளுக்குப் பொறுப்புடையவராகின்றார். பிள்ளையின் வளர்ச்சிப் போக்குக்குப் பொருந்தும் சமுதாயச் செயற்பாட்டுத் தொகுப்பினைச் செயற்படுத்தி அவனின் சமுதாய வளர்ச்சிக்கு உதவியளிப்பதற்கு நாமாற்றலுள்ளவர்களாக இருக்க வேண்டும்.

நாங்கள் இதை எவ்வாறு செய்யலாம்?

இதற்காக நாங்கள் முதலில் பிள்ளையின் சமுதாய வளர்ச்சிச் சந்தர்ப்பங்களை விளங்கிக் கொள்ள வேண்டும். அப்போது தான் சந்தர்ப்பத்துக்குப் பொருந்தும் சமுதாயச் செயற்பாடுகள் பலவற்றை ஒழுங்காகத் தயாரித்து அவற்றைச் செய்ற்படுத்த முடியும்.

# 1.0 குறிக்கோள்கள்

இந்தப் பாடத்தினைப் படித்து முடித்தபின் நாங்கள் எதிர் பார்ப்பவை கீழே தரப்படும் விடயங்களை விளங்கிக் கொள்வதும் திறன்களைப் பெற்றுக் கொள்வதும் மனப்பாங்குகளை அடைதலு மாகும்.

- சமுதாய விருத்தி என்பது தனிப்பட்டவர்களை சமூகமய மாக்குதல் என்பதை விளங்கிக் கொள்ளுதல்.
- சமுதாய வளர்ச்சியென்பது கல்வியின் முக்கியமான அடைவு என விளங்கிக் கொள்ளுதல்.
- மாணவர்களின் சமுதாய வளர்ச்சிக்கு ஆசிரியர்களும் காரண கர்த்தாக்களென்பதை விளங்கிக் கொள்ளுதல்.
- மாணவர் சமுதாய வளர்ச்சிக்குரிய வேறு காரணிகளை அறிந்து கொள்ளுதலும், கடைப்பிடித்தலும்.
- உமது சமுதாயத்தின் பொறுப்புக்களைப் பற்றி நல்ல மனப் பாங்குகளை வளர்த்துக் கொள்ளுதல்.
- மாணவர்களின் சமுதாய வளர்ச்சியின் அவசியத்தைப் பற்றி நல்ல மனப்பாங்குகளை வளர்த்துக் கொள்ளுதல்.

தொடர்ந்து மேலே கற்பதற்கு முன் இப்பாடத்தைக் கற்பதற்கான உங்களது ஆயத்த நிலையை பரிசோதித்துப் பார்த்தல் வேண்டும். அதற்காகப் பின்வரும் சோதனையில் ஈடுபடுக. ஒவ்வொரு சரியான விடைகளுக்கும் 10 புள்ளிகள் கொடுக்கப்படும். முன்பு மேற்கொண்ட அவதானிப்புப் போன்றவைகள் மூலமாக எவ்வளவு தூரம் இப்பாடத் தைக் கற்பதற்கு ஆயத்தமாக இருக்கின்றீர்கள் என்பதைப் பரீட்சித்துப் பாருங்கள். அதன்பின்னர் நீங்கள் இப்பாடத்தைக் கற்பதற்கு அதிக ளவில் ஆயத்தமாக இருப்பீர்களென்பது நிச்சயம்.

# 2.0 முற்சோதனை

> வினாக்களுக்கான சரியான விடைகள் இந்த மொடியூலின் 10.0 இல் உள்ளன.

1 எல்லா மாணவர்களும் வளர்ச்சியில் ஒரேயளவினைக் காட்டு கின்றார்களா? ஆம்/இல்லை.

2 சமுதாய வளர்ச்சி என்றாலென்ன?"

3 பயனுள்ள சமுதாய வளர்ச்சிச் செல்வாக்கினைப் பிள்ளைகளிடத்து எவ்வாறு ஏற்படுகதலாம்?

4 சிறு குழந்தையின் முதலாவது சமுதாய விருத்திக் கட்டம் யாது?

5 12 வயதுப் பிள்ளைக்கு மிகப் பொருத்தமான கீழே தரப்பட்டுள்ள நடத்தைகளில் கோடிட்டுக் காட்டுக.

அ தன்னுடைய விளையாட்டுப் பொருட்களுடன் தனியாக விளை யாடுதல்.

ஆ தன்னுடைய விளையாட்டுப் பொருட்களை மற்றவர்களுடன் பங்கிட்டு விளையாடுதல்.

இ தன்னேடொத்த பிள்ளைகளுடன் சேர்ந்து செயற்பாடுகளில் ஈடுபடுதல்.

ஈ மற்றவர்களுடன் கூடுவதற்கு விருப்பமாகவிருத்தல்.

> மதிப்பீடு: உமது புள்ளிகள் 50 ஆகவிருந்தால், இந்த மொடியூலை கற்பதற்கான உமது ஆயத்தம் மெச்சத்தக்கது.

# 3.0 குடும்பமென்னும் சமுதாய அலகில் ஏற்படும் சமுதாய வளர்ச்சி

இப்பகுதியில் நாங்களெதிர்பார்ப்பது குடும்பமென்று கூறும் சமுதாய அலகில், குழந்தையின் சமுதாய விருத்தியாகும்.

பிறக்கும்பொழுது குழந்தை யாரையும் தெரிந்திருந்ததா? இல்லை. அவ்வாறுயின் எவ்வாறு குழந்தையானது தனது சூழலில் முதற் றொடர்பினை ஏற்படுத்திக் கொண்டது? அதனைப் பற்றி ஆராய்வோம்.

குழந்தை அழுவதைக் கவனித்துள்ளீர்களா? பொதுவாகக் குழந்தைகள் எச்சந்தர்ப்பத்தில் அழுகின்றன?

பசிஎடுக்கும் போதும் சௌகரியமல்லாதிருக்கும் போதும் பயமேற்படும் போதும், சுகவீனமேற்படும் போதும் குழந்தைகள் அழுகின்றன.

இச்சந்தர்ப்பங்களில் எல்லாம் தாயார் குழந்தையைச் சாந்தப்படுத்திக் கொள்ள முடியும். தாயார் குழந்தையினது தேவைகளைக் கண்டறிகின்றார். குழந்தை மிகவும் சந்தோசமாகச் சிரிப்பதனைக் கவனித்திருகிறீர்களா? பொதுவாக எச்சந்தர்ப்பங்களில் குழந்தைகள் சிரிக்கின்றன? சந்தோச மிகுதியின் போதே சிரிக்கின்றன. குழந்தையானது தாயை நோக்கிக் கைகளை உயர்த்திக் சிரிக்கின்றது. தனது தொண்டையிலிருந்து நல்ல ஓசேயை எழுப்பிச் சிரிப்பதன் மூலம் குழந்தை தனது சந்தோசத்தைக் காட்டுகின்றது. இதுவே தாய்க்கும் குழந்தைக்மிடையே ஏற்படுகின்ற மகிழ்ச்சியான தொடர்பாகும். இதுவேமிக ஆரம்ப நிலையிலுள்ள சமுதாய திருத்தியுமாகும். அழுகையும், சிரிப்பும் குழந்தை தனது சூழலுடன் தொடர்பு கொள்ளும்ஆரம்ப நிலைக் கருவிகளாகும். இத்தகைய தொடர்புகளை ஆரம்பித்த குழந்தை சூழலுடன் தொடர்புள்ள சில செயற்பாடுகளைத் தொடங்குகின்றது. பிள்ளை தனது சிறிய கால்களை உயர்த்தி நடக்கத் தொடங்கியவுடன் என்ன நிகழ்கின்றது? அதன் சமுதாயச் சூழல் விரிவடைகின்றது. தனது வீட்டின் எல்லாப் பகுதிகளுக்கும் ஓடி-ஆடித் திரிகின்றது. கதைக்கின்றது, சிரிக்கின்றது, விகடச் செயல்களில் ஈடுபடுகின்றது. மற்றவர்களைப் பார்த்துப் பாவனை செய்கின்றது. சில வேளைகளில் சண்டை பிடிக்கின்றன, அழுகின்றது. இப்போது குழந்தையினது சமூதாயத் தொடர்புகள் அல்லது சமுதாயத் தாக்கம் விரிவடைவதை நீங்களுணர்வீர்கள். தனது வீட்டுப் படியில் குழந்தை காலடி எடுத்து வைப்பதிலிருந்து இன்னொரு சூழலைக் குழந்தை சந்திக்கின்றது. அவ்வாறு சந்திக்கும் சூழல் குழந்தையின் அயற்புறமாகும்.

கீழே தரப்பட்ட மாதிரியைக் கவனியுங்கள். குழந்தையின் சமுதாயத் தூண்டல்களின் பேறுகளை ஒழுங்குபடுத்த முனைந்துள்ளோம். இது படிமுறையான சமுதாய விருத்தியை விளங்கிக் கொள்ள உதவுமென நம்புகின்றோம்.

பிறந்த குழந்தை: தாயைத் தெரியாது. பெற்ற தாய்க்கும், தன்னைப் பராமரிக்கும் தாய்க்கும் ஒரே மாதிரியான தூண்டற்பேற்றை அளித்தல்.

மூன்று மாதக் குழந்தை: தாயின் குரலை அறிதல் (எபபோதும் குழந்தையுடனிருப்பதால்) தாயின் குரலை விரும்புதல்.

| | |
|---|---|
| ஐந்து மாதக் குழந்தை: | வீட்டில் வசிப்பவர்களை அடையாளம் காண முடிவதோடு, தேவையான உணவினையளித்துப் பராமரிப்பவர்களை அடையாளம்காணல். |
| ஒரு வயதுக் குழந்தை: | மற்றவர் காட்டும் பரிவுணர்வுகளை உணர்ந்து கொள்ளுதல். சுற்றி வர அட்களிருப்பதில் விருப்பம் காட்டுதல். மற்றவர்கள் சிரிப்பதற்கான நடத்தைகளை மீண்டும் மீண்டும் செய்யத் தூண்டப்படல். |

## மொழி

சமுதாய விருத்தியில் குடும்பம் வகிக்கும் செல்வாக்கு.

எமது கலாச்சாரத்தைப் பொறுத்துக் குடும்பத்துடனுள்ள எமது மாணவர்களின் உறவுகள் அவர்களது வாழ்க்கை முழுவதும் பெரும்பாலும் பரவியுள்ளன. நடத்தல், கதைத்தல், சாப்பிடுதல், விளையாடுதல் ஆகிய நிலைகளில் குடும்பத்தின் செல்வாக்கு முக்கியத்துவமுடையது. இந்த நிலைகளில் குடும்பத்தில் நிலவி வரும் நடைமுறைகள் பெரிதும் செல்வாக்குச் செலுத்துகின்றன.


மொழி

குழந்தையானது மொழியையும் மொழி நடையையும் எவ்வாறு பழகிக் கொள்கின்றது? இதனை நீங்கள் சிந்தித்துள்ளீர்களா? குழந்தையானது தான் கேட்கும் ஓசைகளைப் பாவனை செய்து பார்ப்பதைக் கண்டுள்ளீர்களா? அதன் பிறகு குழந்தையானது தான் கேட்கும் ஓசைகளை உச்சரித்துப் பார்க்கின்றது. குழந்தைகள் சொற்களையும் வசனங்களையும் பழகிக் கொள்ளும் புதுமையான முறையினை அவதானித்துள்ளீர்களா? ஒரு மொழியை மட்டுமல்லாது பல மொழி நடைப் போக்குகளையும் குழந்தை தனது குடும்பத்திலிருந்து கற்றுக் கொள்கின்றது. வீட்டிலுள்ள பணியாளொருவரை அழைக்கும் நடைமுறையொன்று இருப்பதால் அதனையும் குழந்தை பாவனை செய்து பழகிக் கொள்கின்றது. குழந்தையின் சமுதாய மயமாகும் தொழிற்பாட்டில் மொழியானது மிகப் பிரதான சாதனமாகும்.

குடும்பச் சமுதாயச் சூழலிலும் அயற் சமுதாயச் சூழலிலும் பல ஒத்த தன்மைகளுண்டு. என் அவ்வாறு காணப்படுகின்றது? குடும்ப அங்கத்தவர்கள் சமுதாயத்தின் பழக்க வழங்கள், சம்பிரதாயங்கள், மதிப்புக்கள் என்பதைப் பெரும்பாலும் பின்பற்றுதலே இதற்குக் காரணமாகும். இம்மதிப்புக்களுடனேயே குழந்தையின் தொடர்புகளிருப்பதால் இவற்றை ஏற்றுக்கொள்ள குழந்தை ஆயத்தமாகவிருக்கின்றது. வேறு சூழலுடன் தொடர்பு கொள்ளும்போது இதே மாதிரியான கணிப்புகளுடையாதாகக் குழந்தை இருக்கமாட்டாது. சமுதாய, உணர்வுகளின் வளர்ச்சியிலுள்ள சமுதாயச் சூழலிலும் குழந்தையின் முதிர்ச்சி தங்கியுள்ளது. குழந்தை தனது தாயுடன் வளர்த்துக் கொள்ளும் உணர்வுகள், சமுதாய வளர்ச்சியில் அதிக செல்வாக்குச் செலுத்துகின்றன. குடும்பத்தில் தாய் தந்தையரின் சிறந்த அன்பைப் பெற்ற குழந்தை குடும்பச் சூழலிலிருந்து வெளியேறிச் சமுதாயச் சூழலில் அடியெடுத்து வைக்கும்போது தன்னம்பிக்கையுடன் காணப்படுகின்றது. மற்றையவர்களுடன் சமுதாய வளர்ச்சியில் ஈடுபடும் பொழுது குழந்தை தனது குடும்பத்திற் பெற்ற அனுபவத்தை உதவியாகப் பயன்படுத்துகிறது. குடும்பச் சூழலில் குழந்தை பெற்ற சிநேக பூர்வமான அன்புத்தொடர்புகள் குழந்தையின் எதிர்கால சமுதாய வளர்ச்சியின் பெரும் செல்வாக்கினைச் செலுத்துகின்றன.

இதுவரை உங்களுக்கு அளிக்கப்பட்ட விடயங்களை மேலும் தெளிவு படுத்துவதற்காக உங்களுக்குச் சில படங்களைத் தருகின்றோம்.

இப்படங்களைக் கவனமாகப் பாருங்கள்.




படத்திற் பிள்ளையானது தனது தந்தையைப் போல் பாவனை செய்ய முயல்கின்றது. இது குழந்தையானது வளர்ந்தவர்போல் செயற்பட முனையும் நடவடிக்கையாகும். குழந்தை தனது நடத்தைப்போக்கை ஆரம்பிக்கும்போதுதான் பார்த்தவற்றையும், கேட்டவற்றையும்பாவனை செய்ய முனைகின்றது.

பிள்ளை செய்ய முனைவது என்ன?



இந்தப்படத்திற் பெண் பிள்ளை செய்ய முனைவது யாது? நாளாந்தம் அதிகாலையில் வரவேற்பறையை அலங்கரிப்பதற்காகத் தாய் செயற்படுவதுபோற் பெண் பிள்ளையும் பாவனை செய்வதைக் காணலாம். இதிலிருந்து நீங்கள் விளங்கிக் கொள்வது, பிள்ளை வளர்ந்தோர் சமுதாயத்தில் அடியெடுத்து வைப்பதற்கு முனைகின்றது என்பதேயாகும்.



தாயும் மகளும் மகிழ்ச்சியாகச் சிநேகபூர்வமான உரையாடலில் ஈடுபட்டிருக்கும். இப்படத்தைக் கொண்டு நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள்? இது தாய்க்கும் மகளுக்குமிடையிலிருக்கும் சிநேகபூர்வமான-நெருங்கிய தொடர்பினைக் காட்டுகின்றது. இவ்வாறான நெருங்கிய தொடர்புகள் குழந்தையின் எதிர்காலச் சமுதாயத் தொடர்புகளுக்கு உதவும் அத்திவாரமாக அமைகின்றன. பிள்ளையானது இந்நெருங்கிய தொடர்பினால், பெருமளவுக்குத் தொடர்புகள் பற்றிய கற்றுக்கொள்கின்றது. பிள்ளையானது இத்தகைய உதவினால் விரிந்த சமுதாயத்தில் காலடி எடுத்து வைக்கும் தன்னம்பிக்கையைப் பெற்றுக் கொள்கின்றது. இவ்வாறான தொடர்பினால், பிள்ளைகள் பலவித உலகத் தொடர்பான மனப்பாங்குகள், கருத்துக்கள், உணர்வுகள் என்பவற்றில் பங்கு கொள்ளவும் பரிமாறிக் கொள்ளவும் சந்தர்ப்பம் கிடைக்கின்றது. குடும்பச் சூழலில் குழந்தைகள் தங்களது தாய் தந்தையரைமட்டும் சந்திப்பதில்லை. சகோதர-சகோதரிகளும் முக்கியமான குடும்ப அங்கத்தவர்களாவர்.

இப்படத்தைக் கவனமாகப் பாருங்கள்.



மூத்த சகோதரனும் இளைய சகோதரியும் தங்கள் கருத்துக்களைப் பரிமாறிக் கொள்வதை இங்கு காணலாம். அவர்களொருவரையொருவர் ஒரு வகையான புதுமையுடன் பார்க்கின்றார்கள். இந்த உறவு முறையானது அன்பையும் இணைப்பினையும் காட்டுகின்றது. இதே முறையில் குடும்பத்தில் பொறாமை, கோபம் என்பவற்றிலும் தொடர்புகள் ஏற்படுகின்றன.

பழக்க வழக்கங்களை, மனப்பாங்குகளைப் பெற்றுக் கொள்ளுதல்:

பழக்க வழக்கங்களைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கின்றீர்களா? எவ்வாறு பழக்க வழக்கங்களை விருத்தி செய்து கொள்ளலாம்? சமுதாயப் பொருத்தப்பாட்டுடன் நடந்து கொள்வது ஒரு விதத்தில் பழக்க வழக்கங்களை விருத்தி செய்வதாகும், எங்களது முதலாவது சமுதாயத் தொடர்பு அல்லது தூண்டல் வேறு குடும்ப அங்கத்தவர்களுடன் ஏற்படுகின்றது. அதனைத் தொடர்ந்து சமுதாயத் தூண்டல் வேறு அயலில் வசிக்கும் நண்பர்களுடனும் ,உறவினர்களுடனும் ஏற்படுகின்றது. அடுத்ததாக அது விரிவடைந்த சமுதாயத்துடன் ஏற்படுகின்றது. இக்கட்டங்களிலெல்லாம் நாம் பல வகையான பழக்க வழக்கங்களைப் பெற்றுக் கொள்கின்றோம். சிறிய குழந்தை ஒரு செயலை மீண்டும் மீண்டும் செய்யும்பொழுது அது பழக்கமாக மாறி விடுகின்றது. சமுதாயக் கருமங்கள் அவர்களின் பழக்கவழங்க்கங்களாகின்றன.

முறையாகவும் முறைசாராமலும் சிறு குழந்தையாக இருக்கும்போது நம் மனத்தில் பதித்த உணர்வுகளும் மனப்பாங்குகளுமே நாம் வெளியுலகுக்குக் காட்டுவனவாகும்.

எவ்வாறு குழந்தையின் சமுதாயச் சூழல் விரிவடைந்தது எனச் சிந்தியுங்கள், ஒரு சிறு குழந்தையானது தனது முதற் சில வருடங்களில் முற்றிலும் தாயினும் ஏனைய குடும்ப அங்கத்தவர்களிலுமே தங்கியுள்ளது. படிப்படியாக இவ்வாறு தங்கியுள்ளமை குறைவடைகின்றது. இறுதியாகக் குழந்தை முழுமையான தனியாளாக மாறி தான் விரும்பியபடி நடத்து கொள்ளக்கூடியதாக மாறுகின்றது. ஆகையால் ஒவ்வொரு குழந்தையும் வாழ்க்கையை ஆரம்பிக்கும்போது முழுமையான சுயநலத்துடன் ஆரம்பிக்கின்றது. குழந்தைகள் தங்களைப்பற்றியே சிந்திக்கும் நிலையில் காணப்படுகின்றன. இச்சுயநலம் குழந்தையிடம் சமுதாய வளர்ச்சி ஏற்படும்போது குறையத் தொடங்குகிறது. சுய நலத்தை மையமாகக் கொண்ட குழந்தை அறிவுத் திறனுடன் மற்றவர்களுடன் தொடர்புகளை மேற்கொள்ளும் தனி நபராகவும் சூழலுக்கேற்ற பொருத்தப்பாடுடையதாகவும் தன்னை மாற்றியமைத்துக் கொள்கின்றது. இதுவே சமுதாயவிருத்தியாகும்.

## செவ்வைபார்த்தல் 1

சமுதாய வளர்ச்சி பற்றி நீங்கள் இதுவரை விளங்கிக் கொண்டவைகளைப்பின்வரும் பரீட்சையைச் செய்வதன் மூலம் பரீட்சித்துப் பாருங்கள்.

1. பிறக்கும்போது குழந்தை யாரையும் அறிந்து கொள்ளுமா? ஆம்/இல்லை.
2. மூன்று மாத வயதுள்ள சிசுவின் சமுதாய வளர்ச்சியின் இலட்சணம் ஒன்றைத் தருக.
3. ஒருவருட வயதுள்ள குழந்தையிடம் காணப்படும் சமுதாய இலட்சணங்கள் இரண்டு தருக.
4. குழந்தை காலடி வைத்து நடக்க ஆரம்பிக்கும் காலத்தில் நடைபெறுவது என்ன?
5. பிள்ளை நடத்தை மாதிரிகளை எவ்வாறு கற்றுக் கொள்கின்றது?
6. குழந்தைக்கும் தாய்க்குமிடையில் சுமுகமான தொடர்பு ஏன் அவசியமாகின்றது?
7. சமுதாய வளர்ச்சி எதனைச் சுட்டிக் காட்டுகின்றது?

இக் கேள்விகளுக்குரிய விடைகள் இலக்கம் 10.0 தரப்பட்டுள்ளவு உங்கள் விடைகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கவும்.

# 4.0 சமுதாய வளர்ச்சியும் பிள்ளையின் விரிவடையும் சமுதாய தொழிற்பாடுகளும்

நான் இப்போது முயற்சிப்பது பிள்ளையின் கிரமமான சமுதாயத் தொழிற்பாடுகளினதும், நடத்தை மாதிரிகளினதும் வளர்ச்சியை ஒரு அட்டவணையின் உதவியுடன் உங்களுக்கு எடுத்துக் காட்டுவதற்கேயாகும். தாயின் பராமரிப்பில் இருந்த குழந்தை, படிப்படியாகக் சுய எண்ணக் கருக்களையும், தொழிற்பாடுகளையும் கொண்ட தனிப்பட்ட ஒருவராக மாற்றமடையும் விதத்தை இவ்வட்டவணை விளக்கிக் காட்டுகின்றது. சமுதாயவளர்ச்சியோடு சமுதாயத் தொழிற்பாடுகளும் விரிவடையும் விதம் இதனால் விளங்குகிறது.

முதலாவது கூட்டினுள் வயது 0-4 வரையுள்ள பிள்ளைகளைப்பற்றியும் இரண்டாவது கூட்டினுள் வயது 4-10 வரையுள்ள பிள்ளைகளைப் பற்றியும் மூன்றாவது கூட்டினுள் 10-18 வரையுள்ள பிள்ளைகளைப் பற்றியுமான தகவல்கள் அடங்கியுள்ளன.

| வயது 0-4 வரை | வயது 4-10 வரை | வயது 10-18 |
|---|---|---|
| உடல், உயிரினவியற் செயற்பாடுகளைப் பராமரிப்பதில் தாயிலே தங்கியிருக்கும். | பராமரிப்பு தாயினால் மட்டுமல்ல. | உடல், உயிரினவியல் செயற்பாடுகளில் சுயாதீனமுண்டு. |
| தனக்குமாத்திரம் உலகம் சொந்தமானது என நினைக்கும் சுயநலத்துடன் பொறுமையற்றதாகவிருக்கும். எப்போதும் இன்பத்தையே நாடும் தன்னைப் பற்றி மாத்திரம் நினைக்கும் சுயநலவாதி. | மற்றவர்களிருப்பதையும் அறிந்து கொள்ள முடியும். மற்றவர்களை மதிக்க முடியும். பிள்ளைகள் தன்னைச் சுற்றியிருப்பதைக்காண விருப்பமுண்டு. | தனக்கு மாத்திரம் சொந்தமானது என நினையாமை சமுதாயத்தை மதித்தல். தனது மகிழ்ச்சியைக் கைவிட்டு மற்றவர்களின் நலனைப்பற்றி நினைக்கும் ஆத்ம பலமுண்டு. சமுதாயத்தை விரும்புதல். |
| தேவைகளுக்கான எல்லையில்லை. எல்லாவற்றையும் தனதாக்கிக் கொள்ள முயற்சி செய்யும். | எல்லையற்ற தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள முயலல். ஆனால் பூரணமாக அது வெற்றியளிக்க மாட்டாது. | தேவைகளில் எல்லை உண்டு. எல்லாவற்றை தனதாக்கிக் கொள்ள முயற்சி செய்யமாட்டாமை. |
| வளர்ந்தவர்களினால் தடை செய்யப்படும் நோக்கங்களை நிறை வேற்றிக் கொள்ளும் தேவையுண்டு | சமுதாயம் விரும்பும் நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்ள விருப்பம். தடைசெய்யப்பட்ட நோக்கங்களில் நிலைத்து நிற்க விருப்ப முண்டு. | சமுதாய மேற்றுக் கொள்ளும் நோக்கங்களை மதிப்பதோடு தடைகளை நீக்கும் விரும்பமுண்டு. |
| பாவிக்கப்படும் வழக்கமான பழக்க வழக்கங்கள் என்பன இல்லை. | சில பழக்க வழக்கங்களும் நடத்தைகளும் பின்பற்றுவதன் மூலம் அமையும். | சமுதாயம் ஏற்றுக் கொண்டுள்ள நடத்தைப் போக்குகளைப் பழக்கத்தினாலும் பின்பற்றுதலினாலும் ஏற்று நடத்தல். |
| நேரசூசியின்படி வேலை செய்ய முடியாது. | நேரசூசியின்படி வேலை செய்ய முடியும். ஆனால் தவறுவிடும் நேரங்களுமுண்டு. | குறிப்பிடட நேரசூசியின் வேலை செய்யமுடியும். வேலை செய்யமுடியும். நேரகாலத்துக்குக் குறிப்பிட்ட வேலைகளை முடிப்பதில் திறமையுண்டு. |
| பொறுப்புக்களை ஏற்றுக்கொள்ள முடியாது. | சிறு பொறுப்புக்களை ஏற்றுக்கொள்ள முடியும். | பூரணமாகப் பொறுப்புக்களை ஏற்கும் திறமையுண்டு. |

சிறு பிள்ளைகளின் சமுதாயமயமாக்கல் படிப்படியாக விருத்தியடையும் விதத்தைக் கற்றுக் கொள்வதற்கு, அவர்களின் விளையாட்டுத்துறையை அவதானிப்பதுமிக நல்ல முறையாகும். பெரும்பாலும் சிறு பிள்ளைகளின் விளையாட்டுக்கள் சமாந்தரமான விளையாட்டுக்களாகும். இதனால் நாம் விளங்கிக் கொள்வது பிள்ளைகள் குழுக்களாக ஓரிடத்திலிருந்தாலும் விளையாடுவது தனித்தனியேதான் என்பதாகும். பிள்ளைகள் வயதில் சுமார் மூன்று வருடங்கள் பூர்த்தியாகும்போது ஒத்துழைப்புப் பெற்று விளையாடும் விளையாட்டுக்களை ஆரம்பிப்பார்கள். அண்மையிலிருக்கும் மற்றப்பிள்ளைகளோடு விளையாட்டுப் பொருட்களைப் பகிர்ந்து கொண்டு விளையாடுவதற்குப் படிப்படியாக ஆயத்தமாவார்கள். பிள்ளைகள் சிறு வயதில் சமுதாயத் தொடர்புகளை ஏற்படுத்திக்கொள்ளும் விதத்தைப் படிப்படியாக விரிவடையும் விளையாட்டுக் குழுக்களினால் நன்றாக விளங்கிக் கொள்ள முடியும். வயது 01-04க்கும் இடைப்பட்ட பிள்ளைகளின் விளையாட்டுக்களை நீங்கள் அவதானித்துள்ளீர்களா? உங்களது அவதானத்தை நினைவு கூர்வதற்கு முயலுங்கள்.

அவர்கள் விளையாடுவது சமாந்தரமாகவா? அல்லதுஒத்துழைப்புடனா?

மேலும் விளையாட்டுப் பொருட்களைப் பகிர்ந்து கொண்டார்களா? அவர்கள் சண்டை-சச்சரவுகளில் ஈடுபட்டார்களா?

நாங்கள் இப்போது மேலும் விளக்கமான முறையில் அவர்கள் விளையாடும் சந்தர்ப்பங்களை அவதானிப்போம்.

இரண்டு வருட வயதுள்ள பிள்ளைகள் குழுவொன்றும், நான்கு வருட வயதுள்ள பிள்ளைகள் குழுவொன்றும் விளையாட்டுக்களில் ஈடுபடும் விதத்தை இரு சந்தர்ப்பங்களில் அவதானியுங்கள். உங்களது அவதானிப்புக்களை முறையாகக் குறித்துக் கொள்ளுங்கள். அதற்காகக் கீழ்வரும் அட்டவணைப் பாவியுங்கள். பொருத்தமானஇடத்தில் "✓" அடையாளமிட்டுப் பூர்த்தி செய்யுங்கள்.

| | இரண்டு வருடப் பிள்ளைகளின் குழு | நான்கு வருடப் பிள்ளைகளின் குழு |
|---|---|---|
| அவர்கள் தமது விளையாட்டுப் பொருட்களைப் பகிர்ந்து கொண்டார்களா? | | |
| குழுஊக்கம் அவர்களிடையே காணப்பட்டதா? | | |
| அவர்களிடையே ஏதாவது உணர்வுகளின் உறுதியின்மையை அவதானித்தார்களா? | | |
| அவர்கள்-சண்டை-சச்சரவுகளில் ஈடுபட்டார்களா? | | |
| அது சமாந்தரமான விளையாட்டுக்களா? | | |
| அது ஒத்துழைப்புப் பெற்று விளையாடும் விளையாட்டுக்களா? | | |

அ இரு வயதுக் குழந்தைகளினதும் நான்கு வயதுப் பிள்ளை களினதும் விளையாட்டில் ஏதாவது வேறுபாடுகளை நீங்கள் அவதானித்தீர்களா?

ஆ அப்படியானல் இந்த வேறுபாடுகள் என்ன காரணங்களினல் ஏற்பட்டுள்ளன என்பதைக் கண்டறியுங்கள்.

குழந்தை விளையாட்டுக்கள் பற்றி "க்ரேவும் க்ரேவும்" எழுதியுள்ளவைகளை வாசித்துப் பாருங்கள்.

" . . . . சுமார் இரண்டு வருடங்கள் வயதுள்ள குழந்தைகள் தனித்தனியே விளையாடுகின்றன. இரண்டு வருடக் குழந்தை தான் இருக்குமறையில் இன்னெரு குழந்தை இருந்தாலும் தனியே அறையின் ஒரு மூலையிலே விளையாடும். மற்றக் குழந்தைகளின் விளையாட்டுப் பொருட்களை புறித்துக் கொள்ள முயலும்போது மட்டும் தான் இன்னெரு குழந்தை இருப்பதை அது வெளிப்படுத்துகிறது. இவ்வாறு அவர்களிடையே சுண்டை-சச்சரவுகள் தலை தூக்குகின்றன.

படிப்படியாக "நான்" என்ற எண்ணக்கருவிலும் பார்க்க "நீ" என்ற எண்ணிக் கரு தலைதூக்கிறது. தனது தேவைக்காக மற்றக் குழந்தைகளுனுடம் சேர்ந்து கொள்கிருர்கள்.

இன்னும் குழந்தை "எனது பொருள் என்னுடையதே" என்ற உணர்விலேதான் செயற்படுகின்றது. ஆனல் "உனது பொருள் உன்னுடையதே" என்ற உணர்வும் அதற்கு இருக்கிறது. மூன்று வருடக் குழந்தை படிப்படியாக "எனது பொருள் உன்னுடையதுமாகும்" என்னும் எண்ணிக்கருக்களை ஏற்றுக் கொள்கிறது. இவ்வயதாகும் போது குழந்தைகள் தமது பொருட்களைப் பகிர்ந்து கொள்ளுவதற்குப் பெரும் விருப்புக்காட்டுகின்றன. அப்படியானலும் மூன்று வருடம் பூரணமாகும் வரை "ஒத்துழைப்பு விளையாட்டுக்கள் பற்றிய எண்ணக் கரு" அவர்களிடையே நன்ருக வளர்வதில்லை.

இப்போது நீங்கள் பெற்ற அவதானிப்பின் (பேறுகளை) முடிவுகளை "க்ரேவும் க்ரேவும்" என்போரது முடிவுகளோடு ஒப்பிட்டுப் பாருங்கள்.

இரண்டாவது செயற்பாட்டை நீங்கள் கற்று முடித்துள்ளீர்கள். அப்பிரிவிலிருந்து இப்பரிட்சையை உங்கள் முன் வைத்துள்ளோம்.

## செவ்வைபார்த்தல் 2

1 சுயநல வாதி என்பவர் யார்?

2 குழந்தை தனது எல்லையற்ற தேவைகளுக்கு ஒரு எல்லையை எவ்வயதில் ஏற்படுத்திக் கொள்கிறது?

3 குறிக்கப்பட்ட நேரசூசிக்கு ஏற்ப வேலை செய்வதற்குக் குழந்தை தொடங்குவது எவ்வயதை அடையும்பொழுது?

4 இரண்டு வயதுக் குழந்தை தனது விளையாட்டுப் பொருட்களோடு எவ்வாறு விளையாடுகிறது?

5 "எனது பொருள் உன்னுடையதுமாகும்" என்ற எண்ணக் கரு குழந்தையின் எவ்வயதில் ஏற்படுகிறது?

6 சமாந்தரமான விளையாட்டு என்ருலென்ன?

7 "ஒத்துழைப்பு" விளையாட்டுக்களென்ருலென்ன?

உங்களது விடைகளை மொடியூலின் இல 10.0 இல் உள்ள விடைகளோடு ஒப்பிட்டுப் பாருங்கள்.

# 5.0 பரந்த சமுதாயத்தில் பிள்ளைகளின் சமுதாய விருத்தி

பாடசாலையில் உங்களது முதலாவது வருடம் ஞாபகத்திலுண்டா? பரந்த சமுதாயத்தோடு தொடர்பு ஏற்பட்டபோது ஏற்பட்ட உணர்வுகள் ஞாபகத்திலுள்ளனவா? அத்தகைய உணர்வுகள் மகிழ்ச்சியுடன் கலந் காணப்பட்டவா? அத்தகைய உணர்வுகள் சந்தேகத்துடனும், பயத்துடனும் கலந்து காணப்பட்டனவா?


இவ்வாறான விடங்களை மனத்துக்குத் திரும்பவும் கொண்டு வருவது பயனற்றவைகளெனக் கருதுகிறீர்களா? நாங்களே அவ்வாறான உணர்வுகள் பயனுள்ளவையென்பதை எங்களுக்குள் விளங்கிக்கொள்ள வேண்டும். இவை எம்மைச் சுற்றியுள்ள உலகத்துடன் பொருத்தப்பாடடைவதற்குப் பயன்படுவன. பாடசாலைச் சமுதாயத்தில் மாணவன் புகும்பொழுது என்ன நடக்கிறது?

முதன்முறையாகப் பரந்த ஒரு சமுதாயத்தின் அங்கத்தவராக மாறுகின்றான்.

குடும்பச் சூழலில் குடும்ப அங்கத்தவர்களிடையே காணப்படும்பழக்க வழக்கங்கள், மனப்பாங்குகள், நடத்தைகள் என்பவற்றுள் ஒத்த தன்மையானவற்றைக் காண முடிவதில்லை.

அவன் தனது நண்பர்களை இச்சமுதாயத்தினூடாக அடையாளம் காண்கின்றான்.

நண்பர்கள் எப்படிப்பட்டவர்கள்? என்ன அடிப்படையில் அவன் மீது செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் வேறுபடும் என்பதைக் கீழே கொடுக்கப்பட்ட வரிப்படத்தில் இருந்து தெரிந்து கோள்ளலாம்.




தனது நண்பர்களைத் தெரிவு செய்த பின் அவர்கள் வாழ்க்கையை அவர்களது வாழ்க்கையுடன் பொருத்தப்பாடடையச்செய்வர். அவரும் மற்றவர்கள் கனவு காண்பதுபோல் கனவு காண்பர். அவர் ஈடுபட்டிருக்கும் செயற்பாடுகள் எல்லாம் அவரது செயற்பாடுகளாகின்றன. அவர்கள் கற்பதிலும் விளையாடுவதிலும் ஒருமித்துக் காணப்படுவர். அவர்கள் யாவரும் ஒரே மாதிரியான சங்கீதத்தை விரும்புவர். தாங்களொன்றிணைவதால் மகிழ்ச்சியடைவர். இவ்வழியிற் பார்க்கும்போது பெற்றோர்கள், ஆசிரியர்கள், நண்பர்கள் ஆகியோவரால் உருவாக்கப்பட்ட சூழல், தூண்டற்பேற்றால் பிள்ளைகள் சுயமான செயற்பாடுகளில் ஈடுபடுகின்றனர். காலம் செல்ல அவை பழக்க வழக்கங்களாகப் பதிந்து விடுகின்றன. இப்பழக்க வழக்கங்களூடாக அவரது குண நலன்கள் விருத்தியடைகின்றன.

குணநலவியல்புகளின் வளர்ச்சிக்கேற்ற விசேட நடத்தைப் நோக்குகளை, தூண்டற்பேறுகளை பிள்ளைகள் மேற்கொள்ளச் செய்வது பொருத்தமானதும் அவசியமானதுமாகும். சமுதாயத்தினுல் நல்ல நடத்தைப் பண்பு மாதிரிகள் எனக் கருதப்படுவனவற்றைப் பழக்க வழக்கங்களாகப் பிள்ளைகளிடம் பதிய வைப்பவும், விரும்பவைப்பதும் முக்கியமானதாகும். பிள்ளையானது முழுமையாகச் சமூகதாயமயமாக்கப்பட்ட தனி மனிதனுக மாறுவதற்கு அது வாழும் சமுதாயத்தில் அதன் நடத்தை மாதிரிகள் சமுதாயத்தினுல் ஏற்றுக் கொள்ளப்பட்டதாகவும், சமுதாயத்துக்குப் பொருத்தமானதாகவும் இருக்க வேண்டும்.

## சமவயதுக் குழு

இப்படத்தைப் பாருங்கள் அவர்கள் குழுக்களாகக் காணப்படுகின்றனர்.




இனி நாம் சமுதாய நடத்தையைக் கற்போம். இவற்றைக் கற்கும் பிரதான இடம் சமவயதுக் குழுவாகும். பிள்ளைகளைப் பல சமுதாயக் கட்டங்களில் அவதானிப்பது பாடசாலை ஆசியர்களுக்கு அதிக பயன்பாடுடையது. அவ்வாறுன அவதானிப்புக்களை கருத்துடையதாக்குவதற்கு நாங்கள் இந்த அவதானிப்பில் ஈடுபடும்போது மனதில் பின்வரும் வினுக்களை வைத்திருக்க வேண்டும்.

இவ்விடத்தில் பிள்ளைகள் கற்றுக் கொள்வது எவை? அவர்கள் எப்படியான மனப்பாங்குகளை வளர்க்கின்றுர்கள்? இச்செயற்பாடுகளால் பூர்த்தி செய்யப்படும் பயிற்சிகளின் மூலம் பெறுவது யாது?

அவர்களது முகத்தில் மகிழ்ச்சியைக் காணலாம். எல்லோரும் குழுக்களால் ஏற்றுக் கொள்ளப்பட்ட அங்கத்தவர்களாவர். இவ்வாறு அங்கத்தவர்களாக வருவதற்குத் தேவையான குணநலங்கள்யாவை? அவ்வாறு குழுவிலுள்ள வர்களாம் ஏற்றுக் கொள்ளப்படுவதற்கு எத்தகைய நடத்தைக் குணநலங்களை உங்களிடம் வளர்த்துக் கொள்ள வேண்டும்? இத்தகைய குணநல நடத்தைகளை மாணவர்களிடம் நிலைக்கச் செய்ய ஆசிரியர்களால் என்ன செய்ய முடியும்?


எவவாறு ஒரு பிள்ளையானது• விளையாட்டுக் குழுவினைக் கட்டுப்படுத்துகிறதென்பதை இப்படம் காட்டுகிறது. இது ஒரு சமுதாய வளர்ச்சிக் கட்டமாகும். இதில் பெண்பிள்ளையாவது சமுதாயக் குழுவொன்றில் தலைமைத்துத்தைப் பெற்றுள்ளது. எமது போட்டிச் சமுதாயத்தில் தலைமைத்துவத்துக்குக் கடும் போட்டியுண்டு.



ஒரு சந்தர்ப்பத்தில் தலைமைத்துவத்தில் திறமையைக்காட்டிய பிள்ளை இன்னொரு சந்தர்ப்பத்தில் அதே திறமையைக் காட்ட முடியுமா? தலைமைத்துவத்தில் பொறுமைகாண முடியுமா? இச்சந்தர்ப்பமான்து விளையாட்டுச் சந்தர்ப்பமாகும். வேறொரு சமுதாயச் சந்தர்ப்பத்திலும் இதே இளம் பிள்ளை தலைமைத்துவம் பெறத் திறமையுடையாதா? பாடசாலைச் சமுதாயத்தில் தலைமைத்துவத்தில் திறமை காட்டும் பிள்ளைகள் அதே திறமையை விரிவான சமூகத்திலிருந்க்கும்போதும் காட்ட முடியுமா? பாடசாலை எதிர்காலத் தலைமைத்துவத்துக்குப் பிறப்பிடமாகும். எனவே, பாடசாலையில் தலைமைத்துவத்தை ஏற்றல் முக்கியமானகாகும்.


எல்லாப்பிள்ளைகளும் தலைமைத்துவத்தை வகிப்பதை எதிர்பார்க்க முடியுமா? இவ்வாறு இல்லாவிட்டால் தலைமைத்துவம் வகிக்கக் கூடிய விசேட திறமையுடைய பிள்ளைகள் விசேடமாக இருக்கின்றுர்களா? இவை பாடசாலையில் கவனம் செலுத்த வேண்டிய முக்கிய பிரச்சனைகளாகும். ஆசிரியர்கள் பாடசாலையிலுள்ள மாணவர்களுடன் சுமுகமான-சகோதரத்துவமான உறவினைப் பேற வேண்டும்.

இபபடததை அவதானியுங்கள்



இப்பிள்ளைகளிருவரும் என்ன செய்கிறார்கள்? இவர்கள் சண்டையிலீடு படுவதற்கு ஆயத்தமாகிறார்கள். இது எங்களது சமுதாயம் அனுமதிக் காத ஒரு செயலாகும். ஆனால் பிள்ளைகள், விசேடமாக் ஆண் பிள்ளை கள் ஒருவரை யொருவர் அடித்துத் தாக்கிக் கொள்வது தங்களது உடற்சக்தியை வெளியே காட்டும் ஒரு நடத்தையாகும். ஆதலால் பாடசாலைச் சமுதாயத்தில் இதுவும் ஒரு வகை சமுதாய வளர்ச்சிப்படி யாகும். பிள்ளைகளின் சமுதாயத்தில் அசைவுத் திறன்களின் வளர்ச் சிக்கும் இது ஒரு வகையில் உதவுகிறது. ஆனால் இவ்வாறான நடத்தை கள் எல்லையற்ற நிலையில் தொழிற்படுவதற்கு இடமளித்தல் முடியாது இப்பிள்ளைகளேன் சண்டை பிடித்துக் கொள்கிறார்கள்? இவர்களின் எதிர்கால நடத்தைப் போக்கில் இவ்வாறான சண்டை சச்சரவுகள் எவ்வாறான தாக்கத்தை ஏற்படுத்துகின்றன? இவர்கள் கடுமையான நடத்தைப் போக்குள்ளவர்களாக ஆகிவிடுவார்களா?

வளர்ந்தோர் சமுதாயத்திலும் இவ்வாறு நடந்து கொள்ள முற்படு வார்களா? இவ்வாறான நடத்தைகளைக் கவனித்திருக்க முடியாது. சண்டை சச்சரவுக்கான காரணத்தை வினவி அவற்றைச் சமாதானப் படுத்தல், அவர்களது கூடாத உணர்வுகளை அப்புறப்படுத்தல் என்பன ஆசிரியரது பொறுப்பாகும். இங்கே தன்னோடு வெளியுலகத்தையும் கவனித்துத் தீர்மானங்களை மேற்கொள்ள பிள்ளைக்குச் சந்தர்ப்பமேற் படுகிறது. இது மற்றவர்களது கருத்துக்களையும் கௌரவித்து நடப்ப தற்குப் பழக்கமும்-பயிற்சியும் பெறும் சந்தர்ப்பமாகும். பிரச்சினைகளே ற்படுவதற்குரிய காரணம் இவர்களுக்கிடையே தலை தூக்கிய கருத்துவேறுபாடுகளாக இருக்கலாம்.



உங்கள் கவனத்தைப் பக்கத்திலுள்ள படத்தில் செலுத்துங்கள். இப்படத்தில் காட்டப்பட்ட சமுதாய வளர்ச்சித் கட்டம் எதுவென காட்டவில்லையா? ஏன் இந்தப்பிள்ளைகள் இருவர் தனிமையிலிலுக்கின் றார்கள்? இந்த நிலைமையை நீங்கள் மிகவும் கவனமாகக் கருத்துக் கெடுத்துக் கொள்ள வேண்டும். இவ்வாறாகப் பிள்ளைகள் சமுதாயத் திலிருந்து பிரிந்து செல்ல அனுமதிக்கப்பட்டால், இவர்கள் சமூக விருத்தியடையமாட்டார்கள். இவர்களைப் படிப்படியாகச் சமுதாயத்தில் கவர்ந்திருப்பதற்கும்-இவர்களைக் குழுவில் சேர்த்துக் கொள்வதற்கும் உங்களது அன்பான வழிகாட்டல் மிக முக்கியமானதாகும். பிள்ளைகள் இவ்வாறு அடிக்கடிதனிமையாக்கப்படவிட்டால் இவர்கள் சமுதாயத் தினால் கைவிடப்படுவார்கள்.

இதன் விளைவாக இவர்களது சமுதாய வாழ்க்கையில் சமுதாயத்தைக் கைவிட்டுவிடுகிறார்கள். இவர்களுக்கு தங்களுக்குள் தாம் தோல்வி யடைந்துவிட்டோமெனக் கருத இடமுண்டு. பாடசாலையில் தனது சமுதாய வளர்ச்சித் திறன்களை வளர்த்துக் கொள்ள சந்தர்ப்பம் கிடைக்காததினால் இவர்கள் சமுதாய/த்தினால் ஏற்றுக் கொள்ளாத நடத்தை மாதிரிகளில் ஈடுபடுவர். சமுதாய வளர்ச்சித் திறன்கள் வளராவிட்டால் வயது வந்தவர்கள் சமூகத்திலும் தனியாக்கப்பட வராவர்.

இத்தகைய மாணவர்களைப் பொறுத்து நாம் ஆற்ற வேண்டிய கடமைகள் முக்கியமானவையாகும். ஆது முழு வளர்ந்தோர் சமூகத் துக்கும் பரவ வேண்டும். அவ்வாறான பிள்ளைகளை அவதானிப்பதால் உங்கள் விளக்கத்தையும் விரிவுபடுத்திக் கொள்ளலாம். அதன் பின்பு நீங்களெடுக்க வேண்டிய வழிவகைகளை விளங்கிக் கொ...ள முடியும்.

இப்பொழுது உங்களை இன்னொரு குழந்தை அவதானிப்பில் கவனம் செலுத்தச் செய்கின்றோம். இந்த அவதானிப்பின் மூலம் உங்களைக் குழந்தைகளின் சமுதாய விருத்தியில் அதிக தூரத்துக்குக கவனம செலுத்தச் செய்வதோடு குழந்தைவிருத்தி பற்றியும்-குழந்தைகளின் சமுதாய விருத்தி பற்றியும் உங்களது அறிவை விருத்தி செய்து கொள்ளலாமென நம்புகிறோம். கட்டங்களும் அவதானிப்புக்களு மடங்கிய அட்டவணை தரப்பட்டுள்ளது. அதனைப் பார்த்து உங்களது அட்டவணையைத் தயாரித்துக் கொள்ளுங்கள். இதில் குறிப்பிடப்படாத எதாவது அவதான்ப்புக்களிருந்தால், அவற்றையும் குறித்துக் கொள் ளுங்கள்.

| வகுப்பறையில் சந்தர்ப்பங்கள் அல்லது கட்டங்கள் | அவதானிப்புக்கள் | உங்கள் கருத்துகள |
|---|---|---|
| ஆண்பிள்ளைகளும் பெண்பிள்ளைகளும் ஒன்றாகச் செயற்பாட்டில் ஈடுபடுகின்றார்களா? | ஆம்-இல்லை-சில வேளைகளில். | . . . . . . . . |
| உமது அவதானிப்பில் வேறுபட்ட நடத்தைகள் உண்டா? | . . . . . . . . . | . . . . . . . . |
| அவர்கள் கலந்து சுதந்திரமாக செயற்படுகின்றார்களா? உமது அவதானிப்பில் கண்ட எனையவை. | ஆம்-இல்லை-சில வேளைகளில். | . . . . . . . .<br>. . . . . . . . |
| அவர்கள் செயற்படும்போது ஆண்-பெண் பிள்ளைகள் வெவ்வேறாகச் செயற்படுகின்றார்களா? உமது அவதானிப் பில் வேறு மாதிரியான நடத்தைகள் வெளியாகின்றனவா? | ஆம்-இல்லை-வேறுபாடு இல்லாமல்<br>. . . . . . . . . | . . . . . . . .<br>. . . . . . . . |
| அவர்கள் தனித்தனியாகக் செயற்பட விரும்புகிறார்களா? | ஆம்-இல்லை-வேறுபாடு எதுவும காணப்படவில்லை | |
| அவர்கள் குழுக்களாகச் செயற்படவிரும்புகிறார்களா? வேறு எதாவது அவதானிப்புக்கள் பெற்றுள்ளீர்களா? | ஆம்-இல்லை . . . .<br>. . . . . . . . . | . . . . . . . .<br>. . . . . . . . |

| | |
|---|---|
| மேற் தரப்பட்ட செயற்பாடு பற்றி மீண்டும் உங்கள் கவனத்தைச் செலுத்துங்கள். | |

நீங்கள் அவதானித்தவை யாவை? . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .

ஆண் பிள்ளைகளுக்கும் பெண் பிள்ளைகளுக்கும் இடையில் நடத்தை வேறுபாடுகள் எதனையும் அவதானித் தீர்களா? . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .

சமவயதுக் குழுக்களின் நடத்தைகளை அவதானித்த பின் எமது கவனத்தைப் பிள்ளைகளின் "குழு விருப்பங்களில்" செலுத்துவோம்.

நாலாம் ஆண்டு வகுப்பினை அடைந்த பிள்ளைகள் குழுக்களாக-இணை யும்போது ஒத்த பாலினரை விரும்புகின்றனர். அவர்களிடையே ஏற் படும் நட்புறவானது வெளிப்படையான ஓர் அம்சமாகும். இந்தக் குழுக்களில் பிள்ளைகளிடையே ஓரளவு சுதந்திரத்தைக் காணலாம். அவர்களது விளையாட்டுக்கள் வீட்டிலிருந்து சுற்றுப் புறத்துக்கும்பரவு கின்றன. இக்கட்டத்தில் சமவயதுக் குழுக்கள் உருவாகின்றன. இது சமுதாயமயப்படுத்துவதற்கும் ஆரம்பக் காரணியாகின்றது. சமுதாயப் படுத்தப்பட்ட பிள்ளைகள் இசை, சிரமதானம், வாசிப்பு, விளையாட்டு ஆகிய சமுதாயத்தால் அங்கீகரிக்கப்பட்ட குழுச் செயற்பாடுகளில் ஈடு படுவார்கள். அவ்வாறான சமுதாய வளர்ச்சியை அடையாத பிள்ளைகள் சமுதாயம் விரும்பாத கொள்ளைகளிலும்-சண்டை சச்சரவுகளிலும் ஈடுபடுவார்கள். எனவே, ஆசிரியர்கள் அப்படியான செயற்பாடுகளி லிருந்து விலக்கி அவர்களை நல் வசப்படுத்த முயலுதல் வேண்டும். இது ஆசிரியரின் மிக முக்கிய பணியாகும்.

உங்கள் வகுப்பறைகளில் பிள்ளைகளின் "சமவயதுக் குழு" நடத்தை களை அவதானித்துள்ளீர்களா? இந்த மாதிரியான நடத்தைகளால் அவர்களது ஆளுமை விருத்திகளும் சமூதாயவளர்ச்சிகளும் பற்றிய அவர்களது ஆளுமை விருத்திகளும் சமுதாய வளர்ச்சிகளும் பற்றி தகவல்கள் வெளிப்படுகின்றன. மூன்றாவதாகத் தரப்பட்டுள்ள மொடி யூலிருந்து நீங்கள் குழந்தைகளுக்கான தொழிநுட்பங்கள் பலவற் றைக் கற்றிருப்பீர்கள். கீழே தரப்பட்டுள்ள செயற்பாடுகளைச் செய்த தற்கு அத் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துங்கள். "ஊக விளையாட் டின்" மூலம் மற்றைய பிள்ளைகளைப் பற்றிச் சந்திக்கும் பிள்ளைகள் யாவர் என அறியலாம். நான் தருகின்ற மிகவும் இலகுவான விளையாட்டின் மூலம் ஊக விளையாட்டினை எவ்வாறு செயற்படுத்த லாமென அறிந்து கொள்ளலாம்.

"ஊக விளையாட்டு" பிள்ளைகளைக் கற்கும் கலைத் திறன்.

நீளமான கடதாசித் துண்டுகளை எடுங்கள். ஆண் பிள்ளைகளினதும் பெண் பிள்ளைகளினதும் நடத்தைகளின் மாதிரிகளையும்-தன்மைகளை யும் விரிவாக எழுதிக் கொள்ளுங்கள். எல்லாப் பிள்ளைகளும் இத்துண்டுகளைப் பெற்றுக் கொள்ளக் கூடியதாகச் செய்யுங்கள். இத்துண்டுகளில் குறிப்பிடப்படும் நடத்தை மாதிரிகளும் தன்மை களும் எல்லாப்பிள்ளைகளும் பெறும்படியாகச் செய்தல் வேண்டும். சாதாரணமாக ஒரு வகுப்பறையில் முப்பது பிள்ளைகள் இருக்கின்றார் களென வைத்துக் கொள்வோம்.

நீங்கள் 5 நடத்தை மாதிரிகளைத் தெரிவு செய்திருந்தீர்களாயின் 30×5 துண்டுகள் தேவைப்படும். அதில் நடத்தை மாதிரிகளுக்குப் பொருந்தக் கூடிய விதத்தில் பிள்ளைகளின் பெயர்களை எழுதச் செய்யுங்கள்.

பல்வேறு வகையான நடத்தை மாதிரிகளுக்கு ஏற்ற உதாரணங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

- வெட்கப்படும் பிள்ளைகள், மற்றவர்கள் தங்களை உற்று நோக்கு வதை விரும்ப மாட்டார்கள்.
- மற்றப் பிள்ளைகளின் பேனை, புத்தகங்களை உடைக்கும் அல்லது கிழிக்கும் பிள்ளைகள் சண்டை பிடிக்கும் நடத்தை மாதிரியுடை யவர்கள். "
- வாழ்க்கையை மிக இலகுவாகக் கருதுபவர்கள் எப்புறக் காரணி களாலும் பாதிப்படைய மாட்டார்கள்.

- நட்புறவை விரும்புவர்களுக்கு அநேக நண்பர்களிருப்பர்

- மிகச் சிறிய விடயத்துக்கும் கலக்கமடைபவர்கள். தவறுகளுக் காகக் குறை கூறும் போது அல்லது குற்றம் சாட்டும் போது கண்ணீர் விடும் இயல்பினர்

- தனிமையாகச் செயற்படுபவர்கள். பெரும்பாலும் தனிமையை நாடுபவர்கள். குழுக்களாக இணைந்து விளையாடுவதிலும், சந் தோஷமாக இருப்பதிலும் விருப்பம் காட்டமாட்டார்கள்.

வகுப்பறையில் இவ்விளையாட்டினை நடைமுறைப்படுத்துங்கள். பிள்ளை கள் தங்களது சமுதாய விருத்தியினைத் தாமே அளவிடுவதற்கான இவ்விளையாட்டு மிகச் சிறந்ததாகும். பிள்ளைகளால் கொடுக்கப்பட்ட விடைகளைக் கொண்டு உங்கள் வகுப்புப் பிள்ளைகளின் கூடிவாழியல்பு களை அறிந்து கொள்ளலாம். உங்கள் முடிவுகளைப் பிள்ளைகளின் விடைகளோடு ஒப்பிட்டுப் பாருங்கள்.

இவ்வாறான விளையாட்டுக்களை மாணவர்களுக்கு அடிக்கடி வழங்கு வதன் மூலம், அவர்களிடம் சமுதாய விருத்திக்குரிய பழக்க வழக் கங்களை ஏற்படுத்திக் கொள்ளலாம். அவர்களுடன் நெருங்கிய தொடர் புகளை வளர்த்துக் கொண்டால், பொருத்தமான விடைகளை அவர்கள் தருவார்கள்.

நாளாந்தம் வகுப்பறையில் நடைபெறும் செயற்பாடுகளின்போதும் அவதானிப்புக்களை மேற் கொள்ளலாம். வகுப்பறைச் செயற்பாடு களில் பிள்ளைகள் ஈடுபட்டிருக்கும்போது, பின்வரும் இலட்சணங்களின் அடிப்படையில், அவதானிப்புக்களை மேற் கொள்ளுங்கள். (சிறப்பியல் புகள்.)

- பிள்ளைகள் தங்கள் விருப்பப்படி குழுக்களாக இணைந்து செய லாற்றும்போது பிரிந்து தனியாகக் காணப்படும் பிள்ளை.

- விளையாட்டில் கலந்து கொள்ளாத பிள்ளை.

- இடைவேளையின்போது தனிமையில் காணப்படும் பிள்ளை.

- சுற்றுலாக்களிலும், விருந்துபசாரங்களிலும் பங்கு கொள்ளாத பிள்ளை.

இவ்வாறான பிள்ளைகளை அவதானிப்பதால் நீங்கள் விளங்கிக்கொள் வது என்ன?

### தனிமையை விரும்பும் மாணவன்

இடைவேளையின்போது தனித்திருக்கும் மாணவனும் குழுக்களிலிருந்து பிரிந்திருக்கும் மாணவனும் இத்தனிமையைவிரும்பும் மாணவனா? சுற்றுலாக்களிலும் விருந்துபசாரங்களிலும் பங்குகொள்ளாதவனும் இதே மாணவன்தானா? ஆவ்வாறாயின் அவன் "தனிமையை விரும் பும்" மாணவனாவான்.

குழுக்களுக்கிடையேயும் சில மாணவர்கள் தனிமையாக்கப்படுகின்றனர். இவர்கள் குழுக்களால் ஏற்றுக் கொள்ளப்படாதவர்கள். இவர்கள் தேவையானளவு சமுதாய விருத்தியைப் பெறவில்லை என்பதை இது காட்டுகின்றது. இவர்கள் தமது சமுதாயச் சூழலுக்கேற்பத் தம்மைத் தயார்படுத்திக் கொள்ள உங்களது உதவி தேவைப்படுகின்றது.

உங்களது அவதானிப்புக்களை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு இலகுவான சமூகமானப் பரீட்டையொன்றில் ஈடுபடுங்கள். இது மிகவும் இலகுவாகச் செய்யக் கூடிய ஒன்று. பின்வரும் முறையில் இதனைச் செய்யுங்கள்.

1வது படி

வகுப்பறையிலுள்ள ஒவ்வொரு பிள்ளையும் கடதாசி ஒன்றினைப் பெற்றுக் கொள்ளக் செய்யுங்கள்.

2வது டி

பின்வரும் பிரச்சினைக்குரிய விடைகளைத் தனித்தனியாகக் கடதாசியிலெழுதச் செய்யுங்கள்.

- வகுப்பறையில் பாடம் படிப்பதற்கான குழுவாக இணைவதற்கு நீர் மிகவும் விரும்பும் மாணவனின் பெயரைத் தருக.
- யாருடன் இணைந்து விளையாட விரும்புகின்றார்?
- வகுப்பறையிலுள்ள மாணவர்களில் உமது நண்பனாக நீர்யாரைத் தெரிவு செய்ய விரும்புகின்றீர்?
- ஓய்வு நேரங்களை நீர் யாருடன் சேர்ந்து கழிக்க விரும்புகின்றீர்?

3வது படி

உங்களுக்குக் கிடைத்த விடைகளைப் பகுத்தாராயுங்கள். கிடைத்த விடைகளில் பெயர் குறிப்பிடப்படாத மாணவர்கள் யாராவது வகுப்பில் இருக்கின்றார்களா எனக் கவனியுங்கள். கிடைத்த விடைகளில் மிகக் குறைவாகப் பெயர் குறிப்பிடப்பட்ட மாணவர்கள் யாராவது இருக்கின்றார்களா எனக் கவனியுங்கள். நீங்கள் தனிமையாக விரும்பும் மாணவனெனக் கருதிய மாணவனின் பெயரிங்கு குறிப்பிடப்படவில்லையா? இவ்வாறில்லா விட்டால் மிகக் குறைவாகக் குறிக்கப்பட்டுள்ளதா? நீங்கள் சமூகமானம் பற்றி குழந்தைகளுக்கான கல்வித் தொழி நுட்ப மொடியூலில் கற்றுள்ளீர்கள்.

கிடைத்த தகவல்களைப் பயன்படுத்திச் சமூகமான வரைபடமொன்றை வரையுங்கள். கிடைத்த விடைகளைக் கொண்டு மேற்கொண்ற பகுப்பாய்வுகள் பிள்ளைகளின் சமுதாய விருத்தியினைப் பற்றிய தகவல்களைப் பெற்றுக் கொள்ள உதவியாகவுள்ளன.

## சமூக நட்சத்திரங்கள்

நீங்கள் வரைந்த சமூகமான வரை படத்தில் பின்வரும் இலட்சணங்களுள்ளன.

> சில மாணவர்கள் "நட்சத்திரங்கள்" பொற் பிரகாசப்பர். அவர்கள் "சமூக நட்சத்திரங்கள்" எனப்படுவர். அவர்கள் பெரும்பாலானவர்களின் விருப்பத்தைப் பெற்றவர்வர்.

வேறு சிலர் தனிமையை விரும்பும் மாணவராவர். எல்லோரும் அல்லது பெரும்பாலோர் அவர்களை ஒதுக்கிவிட்டிருப்பர்

வேறு சில மாணவர்கள் சங்கிலித் தொடர்போலிருப்பர். இச் சங்கிலித் தொடர்பு **A** **B**யை விரும்புவதும் **B,C,** யை விரும்புவதும், **C,A** யைக் விரும்புவதும் போன்ற தொடர்புடைய தாகவிருக்கும்.

வேறு சில மாணவர்கள் சமூகமான வரைபடத்தில் சோடி களாகக் காணப்படுவர். அவர்கள் மற்றவர்களுடன் தொடர்பில் லாவிட்டாலும். சோடிகளான தொடர்பினையுடையவர்கள்.

இந்தச் சமூகமான வரைபடம் பல்வேறு மாணவர்கள் இணைய விரும்பும் சமுதாயத்தைப்பற்றிய தகவல்களைத் தருகின்றது. இந்த வரைபடத்தின் உதவியுடன் அவர்களுக்கிடையேயுள்ள தொடர்புகளின் தன்மைகளையும், இணைந்து வாழும் தன்மையையும், ஒருவருக்கொரு வர் உதவி செய்யும் மனதினையும் பெறுமானத்தினையும் அறிந்து கொள்ள முடிகின்றது. நீங்கள் தேடிப் பெற்ற முக்கிய தகவல்களை எவ்வாறு மாணவ மாணவிகளின் சமூதாய விருத்திக்காகப் பயன் படுத்தப் போகின்றீர்கள்? இறுதியாக, தனிமையை விரும்பும் மாண வர்களுக்கு எவ்வாறு உதவ முடியுமெனச் சிந்தியுங்கள்.

## தனிமையை விரும்பும் மாணவர்

வகுப்பறையில் அவர்களுக்குச் சில பொறுப்புக்களை வழங்குகள். அவர்களுக்குத் தலைமைத்துவம் பெறக் கூடிய சந்தர்ப்பங்களை வழங்கு குங்கள். விளையாட்டு மைதானத்திலும் தலைமை தாங்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள். பல்வேறு வகையான வகுப்பறைச் செயற்பாடுகளை ஒழுங்கமைக்கும் பொறுப்புக்களை வழங்குங்கள். படிப்படியாக ஓய்வு நேரத்தினை நல்ல முறையில் செலவிட வழிப்படுத்துங்கள். இவ்வாறு செய்யும்போது மற்ற மாணவர்களின் அனுமதியையும் உதவியையும் பெற்றுக் கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் பல பிரச்சினைகள் தோன்றக் கூடும்.

## செவ்வைபார்த்தல் 3

சமுதாய வளர்ச்சி பற்றித் தற்போது நீங்கள் போதிய விளக்கம் பெற்றுள்ளீர்கள்.

1. பிள்ளை பரந்த சமுதாயத்தில் அங்கத்துவம் பெறுவது எவ்வா றன சந்தர்ப்பங்களில்?

2. பிள்ளை பழக்கங்களை எவ்வாறு ஏற்படுத்திக் கொள்கிறது?

3. எதிர்காலத் தலைவர்களை உருவாக்குவதில் பாடசாலையின் பங் களிப்பு என்ன?

4. எதிர்காலச் சமுதாயத்தில் சமத்துவம் உதவியளிக்கும் மனப் பாங்கு முள்ளதுமான தனிப்பட்டவர்களை உருவாக்குவதற்குப்பாட சாலை நிறைவேற்ற வேண்டிய வழி முறைகள் யாவை?

5. "சமூக நட்சத்திரம்" என்று அழைக்கப்படுவர் யார்?

6. தனிமையை நாடும் மாணவனின் பிரதான இலட்சணங்கள் யாவை?

7. ஒருவர் மற்றவர்களினால் (ஒதுக்கப்படக் கூடிய) நிராகரிக்கப்படக் கூடிய பொருத்தமற்ற இலட்சணங்கள் யாவை?

8. வளர்ச்சியடையும் மாணவனை சமூகமயமாக்கும் பிரதான காரண மொன்றைக் குறிப்பிடுக.

இவ்வினாக்களின் விடைகள் இம் மொடியூலில் இல 10.0 ல் தரப் பட்டுள்ளன. விடையெழுதியதன் பின்தரப்பட்டுள்ள விடைகளுடன் ஒப்பிட்டுப் பாருங்கள்.

9. சமூகமயமாக்கப்பட்ட பிள்ளைகள் பங்குபற்றும் குழுவின் (முயற்சி கள்) செயற்பாடுகள் எப்படிப்பட்டவை யாகும்?

10. போதியளவு சமூகமயமாக்கப்படாத பிள்ளைகள் கலந்து கொள் ளும் குழுச் செயற்பாடுகள் எப்படிப்பட்டவையாகும்.

**பகுதி 4**

# 6.0 குமரப் பருவம்

பாடசாலை வாழ்வில் நீங்கள் அறிந்திருக்க வேண்டிய பிள்ளைகளினது இலட்சணங்கள் சிலவற்றை நாங்கள் இதுவரை கலந்துவையாடினோம். நீங்கள் பாடசாலையில் எதிர்கொள்ளும் இன்னுமொரு முக்கிய பருவத் தைப் பற்றிநாங்கள் கற்போம். அது குமரப்பருவமாகும். குமரப் பருவத்தின் சில இலட்சணங்கள் கீழே சுருக்கமாகத்தரப்பட்டுள்ளன.

**பின்பற்றுதல்**

மற்றவர்களைப் பின்பற்றி நடக்கும் எண்ணம் வளர்ச்சியடை கிறது.

அவர்களது வாழ்வில் எதிர்ப்பால் குழுக்களின் முக்கியத்தை உணர்ந்து செயற்படுதல்.

எதிர்ப்பாலாருடனை தொடர்புகள் பொருத்தப்பாடுடையனவாக இல்லாவிட்டால் அவர்களது போக்கில் பிரச்சினைகள் தலை தூக்கு தல்.

அவர்களின் போக்கில் பிரச்சினைகள் தலை தூக்குவதால் அவர் க்ளின் உணர்வுகளில் அதிருப்தி தலை தூக்குதல்.

குழு நடத்தைகள் வெளிப்படையாகவே தென்படுதல்.

சுயாதீனமாகத் தொழிற்பட வேண்டுமென்ற எண்ணத்தினுற் பெற்றோர்களுக்கும் பிள்ளைகளுக்குமிடையில் அபிப்பிராய பேதங் கள் தலைத்தூக்குதல்.

தன்னம்பிக்கை வளர்ச்சியடைதல்.

தீர்மானம் மேற் கொள்ளும் திறன் வளர்ச்சியடைதல்.

"குடும்பம் பற்றிய எண்ணங்கள் ஏற்படுதல்.

சில சந்தர்ப்பங்களிற் "பிரிந்திருக்கும்" எண்ணமேற்படுதல்.

## வயதுவந்தோர் பருவம்

இது சம்பந்தமாக மேலதிக விளக்கங்களைப் பெற்றுக்கொள்வதற்காகப் பின்வரும் வாசிப்பு அப்பியாசத்தில் உங்களது அதவானத்தை செலுத்துங்கள்.

13ம் வருடம் அல்லது 14ம் வருடத்தில் ஏற்படும் உடல் மாற்றங்களி லும், தன்னைப்பற்றியும் மற்றவர்களைப்பற்றியும் உண்டாகுமாற்ற மடையும் மனப்பாங்கினுலும் குமர வயதுப்பருவத்தினர் பெறும் அனுபவங்களிலும், சமுதாயத் தொடர்புகளிலும் மாற்றங்களுண்டா

கின்றன. "எரிக்ஸன்" என்பவர் எடுத்துக் காட்டுவதுபோல, முன் குமரப்பருவம் என்பது சமுதாய வளர்ச்சியின் ஆழத்தை மட்டிட்டுப் பார்க்கும் தன்னம்பிக்கையை வளர்த்துக் கொள்ளும் செயற்பாடுகளில் ஆர்வமுள்ள பருவமாகும்.

பிள்ளைகள் குமரப் பருவத்திற்கு முன்னும் குமரப் பருவத்திலும் மற்றவர்களுடன் பழகுவதனுல், பின்பற்றும் எண்ணத்தை வளர்த்துக் கொள்வர். ஆரம்பத்தில் ஒத்தபாலினரோடும் பின் எதிர்பாலாரோடும் கொள்ளும் தொடர்புகள் 'குமரவயதுப் பருவத்தினரின் சமுத்தாயச் செயற்பாடுகளில் பெரிதும் தாக்கத்தை ஏற்படுத்தும். ஆண்-பெண் இருபாலாரும் எதிர்ப்பாலாருடன் தொடர்புபட்டுச் செயலாற்றுவதற்குச் சிறந்த பழக்கத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டும். இவ்வாருன சந்தர்ப்பங்களில் ஆசிரியர் இளைஞர்கட்கு வழிகாட்டுபவராகவும், நண்பர்களாகவுமிருக்க வேண்டும். இப்பருவத்தில் புதிய தொடர்புகள் எதிர்கொள்வதினுல் ஏற்படும் பிரச்சனைகளினுல் உண்டாகும் வெறுப்புணர்வுகள் உளக் குறைபாடுக்கு வழி வகுக்கவும் கூடும். அவ்வாறு ஏற்பட்டால் அது பொதுவாக ஆளுமைவளர்ச்சிக்கும் நல்லொழுக்கப் பண்புகளின் வளர்ச்சிக்கும் தடையாக இருக்கும்.

## பெற்ருேர் – பிள்ளை அபிப்பிராய வேறுபாடுகள்

கட்டிளமைப் பருவத்தினர் மகிழ்ச்சிதரும் சகபாடிகளினது குழுக்களோடு சேர்ந்திருப்பதையும், மகிழ்ச்தரும் பிரயாணங்களை மேற்கொள்வதையும் விரும்புவார்கள். இச்சந்தர்ப்பங்கள் அவர்களின் சமூக வளர்ச்சிக்கும் உதவியாக அமையும். எமது கலாச்சாரத்தின்படி பெற்ருேர்கள் தமது பிள்ளைகள் சுயாதீனமாக மகிழ்ச்சி தரும் பிரயாணங்களில் கலந்து கொள்வதையும் சகபாடிகளுடன் சேர்ந்து வாழ்வதையும் அனுமதிக்கப்பின்னிற்பர். அவர்கள் சுயாதீனமாகச் சமுதாயத்திற்காலடி வைப்பதைக் காணப் பெற்ருேர்கள் விரும்பம் காட்டுவதில்லை. பிள்ளைகள் சம்பந்தமாகப் பெற்ருேர்களுக்கிருக்கும் பரிபாலிக்கும் உரிமையற்றுப் போய்விடும். என அவர்கள் சந்தேகம் கொள்கிருர்கள். இம்மனப்பாங்குனல் ஆசிரியர்களுக்கும் பெற்ருேர்களுக்குமிடையில் கருத்து வேறுபாடேற்படும். எங்கள் சமுதாயத்தில் இவ்வாருன் அபிப்பிராய வேறுபாடுகளேராளம். பெற்ருேர்கள் மத்தியில் பிள்ளைகள் சதாகாலமும் பிள்ளைகள் தான். ஆனுல் பிள்ளை இளைஞனுகிப் பின் வளர்ந்தவனுகித் தனது சுதந்திரத்தை ஏனைய எல்லாவற்றிலும் மேலாக மதிப்பதற்குத் தொடங்குகிறுன். இந்நிலையில் அபிப்பிராய வேறுபாடுகள் தவிர்க்க முடியாதவையாகும். இவ்வாருன பிரச்சினைகளுக்கு பாடசாலைக்கும் ஆசிரியருக்குமுள்ள பொறுப்பு மிகவும் பரந்ததாகும். இச் சிக்கலைத் தீர்த்துக் கொள்வதற்கு உங்களது உதவி அவசியமாகிறது. பிள்ளையின் சுய மதிப்பும், சுய கட்டுப்பாடும் வளர்ச்சியடைவதைமனதிற் கொண்டு சுயாதீனமாக நடமாடவும், செய்ற்படுவதற்கும் சந்தர்ப்பங்கள் வழங்கப்பட வேண்டும். சுதந்திரமாகத் தீர்மானங்களை மேற்கொள்வதற்குச் சந்தர்ப்பங்களை வழங்க வேண்டும். பிள்ளைகள் வளர்ச்சியடையும் காலத்தில் அவர்கள் சம்பந்தமான தீர்மானங்களை எடுப்பதற்கு விரும்பமுள்ளவர்களாக இருப்பர். அவ்வாறு தீர்மானங்களை மேற்கொள்வதற்கு இடம் அளிக்கப்பட்டால் அவர்கள் அவ்வாருன ஒரு சந்தர்ப்பத்தில் ஒழுகும் பயிற்சியைப் பெற்றுக் கொள்கிருர்கள். அவ்வாறெடுக்கும் தீர்மானங்களைத் தெரிந்து தெளிவாக்கிக் கொள்வார்கள். கட்டிளமைப் பருவத்தில் தான் பழகுவது எந்தக் குழுவினரோடு? செய்வதெப்படியான வேலைகள்? என்பவற்றின் தீர்மானங்களை அவர்களே மேற் கொள்வதால். அவர்கள் சமுதாய முதிர்ச்சியையும் பெற்றுக் கொள்கிருர்கள். அவர்கள் சுய மதிப்பையும், சுய கட்டுப்பாட்டையும் வளர்த்துக் கொள்வார்கள். ஆகவே, கட்டிளமைப் பருவத்தில் சுதந்திரம் மிக முக்கியமானதாகும்.

இடைநிலைப் பாடசாலைப் பருவததில் கட்டிளமைப்பருவத்தினருக்குச் சுதந்திரமான செயற்பாடுகள் வகுக்கப்படல் வேண்டும். சுயமான வேலைகள், பரிசோதனைகள், ஆராய்ச்சிகள் முதலியவற்றில் ஈடுபடுத் தப்படல் வேண்டும். சமூகச் செயற்பாடுகளைப் பாடவிதானத்தில் ஒரு பகுதியாகக் கொள்ள வேண்டும். அவர்கள் சமூதாய தலைமைத்துவத் துக்குப் பயிற்சியும் பழக்கமும் பெறுவது இக்கால கட்டத்திலேயாகும். அதற்காகப் பல்வேறு இயக்கங்களிலும், சங்கங்களிலும் போதியளவு சந்தர்ப்பங்கள் பெற்றுக் கொடுக்கப்படல் வேண்டும். இதன் மூலம் கட்டிளமைப் பருவத்தினர் எதிர்காலத்தில் சிறந்த பிரசையாவதற் குறிய பயிற்சியைப் பெறுகிறார்கள்.

## வயது வந்தோர் பருவம்

பிள்ளைகளுக்கு வயது வந்தவுடன் குடும்பம் பற்றிய உணர்வுகளும் தொழில் சம்பந்தமாக தெளிவான கருத்துக்களும் ஏற்படுகின்றன வயது வந்து முதிர்ச்சி பெற்ற நிலையில் தாம் குமரப்பருவத்தினராக இருந்தபோது செய்த சில வேலைகளிலிருந்து நீங்கிச் செல்ல விரும்பு வர். வயது 18 வருடங்கள் ஆகும்போது தமது தீர்மானங்களைத் தாமே மேற் கொள்வதற்கு அவர்களுக்குச் சட்ட ரீதியான அனுமதி கிடைக்கின்றது. இத் தீர்மானத்தைப் பொறுப்புணர்வோடு பெற்றுக் கொள்ளக் கூடிய ஆற்றல் அவர்களுக்கு இருக்க வேண்டும். நன் னடத்தைச் சட்ட திட்டங்களும் நல்லொழுங்கப் பண்புகளும் சமுதாய வளர்ச்சியுடன் தொடர்புடையன. கீழே காணப்படும் 3 சந்தர்ப்பங் களில் உங்களது அவதானத்தைச் செலுத்துங்கள்.

பிள்ளை உணவு சாப்புடும்பொழுது சப்புதல் மூலம் பொருத்தமற்ற சத்தமொன்றை எழுப்புகின்றது. இதை வயது வந்தோர் பெரும் பாலும் அனுமதிப்பதில்லை. எனவே, இதைத்தடை செய்ய நடவடிக்கை எடுப்பர்.

தனது பேனாவைத் தொலைத்து விட்டு வீடு வரும் பிள்ளை அது சம்பந்தமாகப் பொய்யொன்றைக் கூறுகிறது. அது பொய் யென்று நாங்கள் விளங்கிக் கொண்டாலும் அதைப் பற்றி அவ்வளவு தூரம் குழப்பமடைவதில்லை. அதைப் பொருப்படுத் தாதிருக்கிறோம்.

பிள்ளை, அசுத்த ஆடைகளையணிந்த அசுத்தமான ஒரு வயது சென்ற மனிதனின் கையைப் பிடித்துக் கொண்டு அவனுக்குப் பாதையின் மறுபக்கம் செல்ல உதவியளிக்கிறது. அவனது அசுத்தமான பொதியையும் தானே தூக்கிச் சென்று உதவுகிறது. சில பெற்றோர்கள்-விசேடமாக மத்திய வகுப்பு, உயர். வகுப்புப் பெற்றோர்கள் இச் செயலை அனுமதிக்க மாட்டார்கள் அவர்களதை வெறுப்பார்கள். காரணம் கிழவன் அசுத்தமாக இருப்பதேயாம். உயர்ந்த குண நலங்களினாலே பிள்ளை இச் செயலில் ஈடுபட்டதென்பதை அவர்கள் மறந்து விடுகிறார்கள்.

இம்மூன்று சந்தர்ப்பங்களைப் பற்றியும் நீங்களென்ன நினைக்கின்றீர்கள்? நாங்கள் பெரும்பாலும் பிள்ளையைச் சமுதாயப் பழக்க வழக்கங்களுக்கு உட்பட்டவனாக்குவதற்கு முயற்சித்தாலும், அன்பு, இரக்கம், உண்மை போன்ற குணப்பண்புகளுக்கு உட்பட்டவனாக்குவதற்கு முயற்சிப்பதில்லை. இது சமுதாயக் குறைபாடாகும். பாடசாலையிலே தலை தூக்கக்கூடிய இதுபோன்ற சந்தர்ப்பத்தைப் பற்றி யோசித்துப் பாருங்கள்.

வகுப்பிலே மிகவும் குழப்பம் விளைவிக்கும் மாணவன் இருக்கிறான். எப்போதும் வகுப்பில் செய்யும் குழப்பங்களின் காரணமாக, ஆசிரியர் அவனைப்பற்றி அதிபரிடம் முறைப்பாடு செய்து அவனைப் பாடசாலையிலிருந்து நீக்கிவிட்டார்.

இன்னொரு வகுப்பிலும் இது மாதிரியான பிள்ளை இருக்கிறான். ஆனால் ஆசிரியர் இப்பிள்ளையின் சண்டித்தனமான செயல்களை வேறுவழியாகவே அணுகுகிறார். படிப்படியாக ஆசிரியர் சில தந்திரமான வழிகளைக் கையாண்டு தன் பக்கம் இழுத்துக் கொள்கிறார். அவனும் ஆசிரியரை ஏற்றுக் கொள்கின்றான். அவனிடம் பொறுப்புக்கள் ஒப்படைக்கப்படுகின்றன. தலைமைத்துவம் வழங்கப்படுகின்றது. படிப்படியாகச் சமுதாயப் பொருத்தப்பாடுடையவனாகின்றான்.

பிள்ளை வகுப்பில் கெட்ட வார்த்தைகளைப் பாவிக்கின்றான். ஆசிரியர் அதைத் தடுக்கின்றார். அன்பான வார்த்தைகளால் கவர்ந்து கொள்கின்றார். படிப்படியாகக் சமுதாயம் ஏற்றுக் பண்பான மொழியில் பேசப் பழக்கிவிடுகிறார்.

கல்விச் சுற்றுலா ஒன்றில் கலந்து கொண்டு உணவு சாப்பிடும் வேளையில், கிராமியச் சூழலிலிருந்து வந்த ஒரு பிள்ளை சமுதாயப் பழக்க வழக்கங்களுக்கு ஏற்பச் சாப்பிடவில்லை. அதன் பின் சமுதாயத்திற் சாப்பிடும் முறையை ஆசிரியர் அன்புடன் அறிவுறுத்துகிறார். அவனதை ஏற்றுக் கொள்கின்றான். திரும்பவும் அம்மாதிரியான நடத்தையைப் பின்பற்றாதிருக்கத் தீர்மானித்துக் கொள்கின்றான்.

இங்கே எடுத்துக் காட்டப்பட்டுள்ள முதலாவது நிகழ்ச்சியில் ஆசிரியரும், அதிபரும் பிள்ளையின் சமூகமயமாக்கலும் எவ்வித அடிப்படையையும் அமைக்கவில்லை. குழப்பம் விளைவிப்பதைச் சமுதாயமேற்பதில்லை. ஆயினும் இக்குழப்படி செய்யும் மாணவனைப் பற்றி முதலாவது ஆசிரியரும் அதிபரும் கையாண்ட முறை பொருத்தமற்றதாகும். பிள்ளையின் குழப்படியை நிறுத்துவதற்கான வழிமுறைகளைக் கையாளாது அவனைப் பாடசாலையிலிருந்து வெளியேற்றியது பொருத்தமான முறையாகாது. இரண்டாம்-மூன்றும்-நான்காம் நிகழ்ச்சிகளின் போது ஆசிரியர் சரியான வழிமுறைகளைக் கையாண்டுள்ளதால் பிள்ளையின் சமூக வளர்ச்சிக்கு அடிப்படை அமைக்கப்பட்டு விட்டது. எனவே, மாணவரின் சமூகமயமாக்கலுக்கு பாடசாலையிலே அத்திவாரமிடப்பட வேண்டும். இதை நாம் உணர்தல் வேண்டும். கீழ்வரும் நிகழ்ச்சிகளைப் பற்றிச் சிந்தித்துப் பாருங்கள்.

5ம் வகுப்புப் பிள்ளையொன்று சல கூடத்திற்குச் செல்லாது தனது கீழாடையை நனைத்துக் கொள்கிறது.

6ம் வகுப்புப் பிள்ளை ஒன்று பாடசாலை விருந்தையில் சூதில் ஈடுபட்டிருக்கும்போது ஆசிரியரிடம் அகப்பட்டுக் கொள்கிறது.

8ம் வகுப்புப் பிள்ளையொன்று பாடசாலை உடைமைகளைச் சேதப்படுபடுத்துகிறது.

10ம் வகுப்பு மாணவனொருவன், குறிக்கப்பட்ட நேரம் பிந்தி விடுதிக்கு வந்து சேர்கிறன். அவன் மதுபானம் அருந்தியிருக்கிறன்

6ம் வகுப்பு மாணவன் ஒருவன் பாடசாலையிற் பொருட்கள் வைக்கும் அறையிலிருந்து பொருட்களைத் திருடுகிறன்.

மேற் கூறியவைகள் அவ்வவ் வயது மாணவர்களைப் பற்றிச் சிந்தித்துப் பார்க்கும்போது சமுதாயப் பண்பாட்டுச் செயலாக நீங்கள் கருதுகிறீர்களா?

பிள்ளைவயதில் வளர்ச்சி அடையும்போது அதேயளவான சமூக வளர்ச்சியும் அவனைத் தொடர்கிறது என்று கருத முடியாது. அதை மேற்கூறிய நிகழ்ச்சிகள் எடுத்துக் காட்டுகின்றன. ஆதலாம் சமூக வளர்ச்சி தானகவே ஏற்படும் ஒரு வளர்ச்சிப் படிமுறை என எண்ண முடியாது. மேல்வரும் நிகழ்ச்சிகளால் போதியளவு சமுதாயப்பொருத்தப்பாடு இல்லாதவர்கள் பாடசாலைச் சமுதாயத்தில் இருக்கிறர்களென்பதை விளங்க முடிகிறது. பயிற்சியின் மூலம் நல்ல பழக்க வழக்கங்களை ஏற்படுத்துவதுடன் நல் வழியில் அவர்களை வழி நடத்துவதையும் நாம் மறந்து விட முடியாது. சமூக வளர்ச்சியின்போது இக்கருமங்களை நிறை வேற்றி முடிக்க வேண்டியிருக்கிறது.

ஆசிரியர் ஒரு சமூகமயமாக்கற் காரணியாவார். நவீனவுலகத்தில் அவரின் செயல்கள் அறிவித்தலோடு மட்டுக் நின்றுவிடுவதில்லை. நல்லாசிரியனவதுடன் ஒரு சிறந்த பெற்றேராகவும் ஆசிரியர் இருத்

தல் வேண்டும். நல்ல நண்பஞக இருக்க வேண்டும். நல்ல வழிமுறை களை உபதேசிக்கதாக இருக்க வேண்டும். பெரும்பாலான மாணவர் கள் சீக்கிரமாகப் பாடசாலையை விட்டுச் செல்வதினுல், அவர்களைச் சமுதாயத்திற்குப் பொருத்தப்பாடுடையவர்களாக ஆக்குதல் ஆசிரியர் களின் கருமங்களில் மிகவும் முக்கியமானதாகும். பிள்ளையை ஒரு நற்பிரசையாக உருவாக்குவதில் மிக முக்கிய பொருப்புப் பாடசாலையை யும் ஆசிரியரையும் சார்ந்ததேயாகும். பிள்ளைகளிடம் சமூக வளர்ச் சியை ஏற்படுத்துவது கல்விக் குறிக்கோள்களில் மிக முக்கிய இடத்தை வகிக்கிறதென்பதனுல் தெளிவாகிறது.

பொதுவாகச் சகல பிள்ளைகளினதும் சமூக வளர்ச்சியை மனதில் கொண்டு நீங்கள் உதவி செய்ய வேண்டும். விசேடமாக சமுதாயப் பொருத்தப்பாடடைவதில் குறைபாடுகள் உள்ள மாணவர்களைப் பற்றி உங்களது பொறுப்பு மிக முக்கியமானது. அவர்கள் மீது நீங்கள் கூடியளவு கவனம் செலுத்துங்கள். பிள்ளைகளின் நடத்தைகளில் பிரச்சனைகளைக் காணும் நேரங்களில் அதை நன்ருக அவதானியுங்கள். அவர்களது பிரச்சினைகள் அல்லது சிக்கல்களை விளங்கிக் கொள்ளுங்கள் பிள்ளை சமுதாயப் பொருத்தப்பாடற்றவஞக நடந்து கொள்வதற்குரிய காரணத்தைக் கண்டறிய முயலுங்கள்.

அவர்களுடன் நல்ல முறையில் பழகி, அவர்களை நன்ருக விளங்கிக் கொண்டு, அதன்பின் அவர்களின் சமூக வளர்ச்சிக்காக நீங்கள் பின் பற்ற வேண்டிய வழிமுறைகளைச் சிந்தித்து அதன் படி செயற் படுங்கள். உங்கள் பாடசாலையில் அனுபவமுள்ள நல்லாசிரியர்கள் ஒருவருடன் இது சம்பந்தமாகக் கலந்துரையாடுவீர்கள். இது உங் களது சிக்கல்களை விடுவித்துக் கொள்ளப் பேருதவியாக இருக்கும். பிள்ளையினது விருப்பத்தையும் பெற்றுக் கொள்ளுங்கள். அப்போது உங்களது காரியம் மிக இலகுவாக அமையும். நீங்களும் அவனும் நண்பர்களைப்போல நெருங்கியிருங்கள். அவனது கௌரவத்திற்குப் பாத்திரமாக நீங்கள் இருக்க வேண்டும். உங்களது அவதானத்தையும் ஆதரவையும், அனுமதியையும், அன்பையும் தேவையானநேரத்தில் அவனுக்கு வழங்குங்கள். அவனுக்குச் சிறந்த சமூகப் பொருத்தப் பாடுள்ள பிரசையாக ஆவதற்கு உதவுதல், கற்பித்தற் காரியத்துடன் சமமாக மதிக்கப்படக்கூடிய ஒரு கருமமாகும். இது நீங்கள் நிறை வேற்றி முடிக்க வேண்டிய மிகப் பெறுமதியுள்ள சமுதாயச் சேவை யாகும்.

## செவ்வைபார்த்தல் 4

1. எரிக்ஸசன் என்பவர் எடுத்துக் கூறுவதுபோல முன் கட்டிள மைப்பருத்தின் இலட்சணங்கள் யாவை?

2. பொருத்தப்பாடடைவதில் சிக்கல்கள் எவ்வாறு தோன்று கின்றன?

3. மனவெழுச்சியில் விரக்தி ஏற்படுவதேன்?

4. ஒரு குழுவின் நடத்தை மாதிரிகள் யாவை?

5. பெற்ருேர்-பிள்ளை அபிப்பிராய வேறுபாடுகள் என் தலைதூக்கு கின்றன?
6. சுய கௌரவமும். சுய கட்டுப்பாடும் வளர்ச்சியடைவதற்கு மிக முக்கியமாக அமைவதென்ன?

விடையை இல 10.0ல் காண்க

சமூக வளர்ச்சி என்ற தலைப்பிலான மொடியூலை நீங்கள் கற்று முடித்துவிட்டீர்கள். இதில் உள்ளடங்கிய பகுதிகள் உங்களது இலக்கை நாடிக் கீழே தரப்படுகின்றன.

## 7.0 சுருக்கம்

சமுதாய வளர்ச்சி என்பது பல்வேறுபட்ட சந்தர்ப்பங்களில் காட்டப்பட்ட சமுதாயச் செயற்பாட்டின் பலாபலன்களாகும்.

பிள்ளைகளின் உடல், உள, உணர்வுகளின் வளர்ச்சிக்குப் பொருத்தமான முறையில் ஒழுங்கமைக்கப்பட்ட தொகுப்பு மூலம் சமுதாய வளர்ச்சியை ஏற்படுத்திக் கொள்ள முடியும்.

சமுதாய நடத்தை மாதிரிகளைப் பிள்ளை கற்றுக் கொள்ள வேண்டும். சந்தர்ப்பங்களை எதிர் நோக்குவதன் மூலம் அவற்றை அறிந்து கொள்ள வேண்டும்.

குடும்பம் குழந்தையின் சமுதாய வளர்ச்சிக்கு முயற் படியாகும். பிள்ளைகளின் விளையாட்டுக்கள் அவர்களது சமுதாய வளர்ச்சியில் முக்கிய பங்கினை வகிக்கின்றன.

சமூகக் கற்றலென்பது சில வகையான பழக்க வழக்கங்களை அபிவிருத்தி செய்வதாகும்.

பாடசாலையில் புகும் பிள்ளையானது பரந்து பட்ட சமூக அமைப்பிலும் புகுந்து கொள்கின்றது.

பிள்ளைகளின் சமுதாய விருத்தி மட்டத்தை அளவிட அவதானிப்புக்கள் சிறந்த வழிகளாகும்.

பிள்ளை வளர்ச்சிக் கட்டத்தில் சமவயதுக் குழுத் தொடர்புகள் இயல்பானவையாகும்.

குமரப் பருவத்தில் (கட்டிளமைப் பருவத்தில்) எதிர்ப்பாற் குழுக்கள் முக்கிய இடத்தை வகிக்கின்றன.

குழு நடவடிக்கைகளின் தன்மை.

ஒழுக்கவியல் சட்டங்களும் அற நெறிகளும் சமுதாய வளர்ச்சியுடன் தொடர்புடையவை.

ஆசிரியரின் பொறுப்பின் முக்கியத்துவம் பிள்ளையின் சமுதாய வளர்ச்சிக்குக் காரணமாகின்றது.

# 8.0 பிற்சோதனை

சமுதாய விருத்தி பற்றி மொடியூலை இப்போது கற்று முடித்துள்ளீர்கள். அதனை மீட்டுப் பார்ப்பதற்காக முழு மொடியூலேயும் அடிப்படையாகக் கொண்ட ஒரு பரீட்சையை இதோ முன் வைத்துள்ளோம்.

1 சமுதாய வளர்ச்சி என்றுலென்ன?

2 சமுதாய வளர்ச்சி ஏற்படுவதை எவ்வாறு கட்டாயப்படுத்தலாம்?

3 பிள்ளையின் சமுதாய வளர்ச்சியில் செல்வாக்குச் செலுத்தும் பிரதான காரணி பின்வருவனவற்றுள் எது?

   1 விளையாட்டுக் குழு.
   2 குடும்ப்ம்.
   3 கோவில்-மசூதி-பன்சல-தேவாலயம்.
   4 உறவினர்கள்.

4 "பிள்ளைகளின் விளையாட்டு சமுதாய முக்கியம் பெற்றது எனெனில்,

   1 உள்ளடக்கி வைக்கப்பட்ட மனவெழுச்சிகளை வெளிப்படுத்துவதற்கு.
   2 பிள்ளைகள் செயற்பாடுகளுடன் மகிழ்ச்சியுமடைவதால்.
   3 பிள்ளைகளைச் சுறு சுறுப்புடன் இருக்கச் செய்வதற்கு.
   4 பிள்ளையின் சமுதாயவளர்ச்சியில் முக்கிய பங்களிப்பினை வழங்குவதால்?

5 அவ்வச் சந்தர்ப்பங்களில் பிள்ளையின் செயற்பாடுகள் நடைபெறும் போதே ஆசிரியர்கள் அவதானிக்க வேண்டியது முக்கியமானது.

ஏனெனில்,

1 செய்ற்பாடுகளை ஒழுங்கான முறையில் கொள்ள உதவுதல்.

2 ஓய்வு நேரத்தைச் சிறந்த முறையில் கழிப்பதற்குரிய வழியாவதால்.

3 இது அவர்களுடைய சமுதாய வளர்ச்சியை அளவிட உதவுவதால்

4 இது வகுப்பறைக் கட்டுப்பாடுகளை மேற் கொள்ள உதவுவதால்.

6 பின் தரப்பட்டுள்ளவர்களில் அதிகளவு சமூதாயமயமாக்கப் பட்டவர் யார்?

1 சுனில் தனது முரட்டுச் சுபாவத்தை வகுப்பில் செயற் பாட்டில் காட்டுகிறான்.

2 சீலா எதற்கும் முன் வருவதில்லை.

3 ரோகன் வகுப்பிலுள்ள எல்லோரோடும் நட்புடன் காணப் படுகின்றான்.

4 குணபாலன் மற்றவர்களை கட்டுப்படுத்த முயலுகின்றான்.

7 ஆரம்ப நிலையிலுள்ள பிள்ளைகளின் சாதாரண நடத்தை மாதிரி என அறிமுகப்படுத்தக் கூடிய நடத்தை எது?

1 மல-சல கூடத்துக்குப் போகாமலே தனது உடுப்பினை வகுப்பறையிலேயே ஈரமாக்கிக் கொள்ளல்.

2 வகுப்பறையில் கத்தி அழுதல்.

3 பாலியல் பற்றி வகுப்பறையில் உரையாடுதல்.

4 வகுப்பறையில் பிள்ளைகளுடன் விளையாடுதல்.

8 பொருத்தமான இடத்தில் புள்ளடி இடுக.

| | சமூகமானது | சமூகமான மற்றது. |
|---|---|---|
| 1 மற்றவர்களுக்கு உதவி புரிபவர். | ☐ | ☐ |
| 2 மற்றவர்கள் மீது சுட்டுரை கூறுபவர். | ☐ | ☐ |
| 3 மற்றவர்களுடன் ஒத்துழைத்து வேலை செய்பவர். | ☐ | ☐ |
| 4 அதிக கோபமடைபவர். | ☐ | ☐ |
| 5 விளையாட்டு மைதானத்தில் கண்டெடுத்த பேனையை ஆசி சியரிடம் கொடுத்தவர். | ☐ | ☐ |

6 புகையிரதத்தில் பயணம் செய்யும் போது தனது இருப் பிடத்தை வயது முதிர்ந்த வருக்கு வழங்கியவர். ☐ ☐

7 நூல் நிலையத்தில் தாமாகவே சத்தமிடுபவர். ☐ ☐

8. நேரத்தோடு வேலை செய்யா தவர். ☐ ☐

9 பாடசாலையிலுள்ள பலவித சங்கங்களின் செயற்பாடுகளில் ஈடுபடுபவர். ☐ ☐

10 சட்ட திட்டங்களுக்கேற்ப வாழ்ந் தாலும் சமுதாயத்தின் முதலீட்டுக்கோ வெகுமதிகளுக் கோ பங்களிகபுச் செய்யாதவர். ☐ ☐

9 குமரப் பருவம் (கட்டிளமைப் பருவம்)

1 முரட்டுச் சுபாவத்தை வெளியிடும் சந்தர்ப்பம்.
2 சுய நம்பிக்கை இல்லாத சந்தர்ப்பம்
3 சுய நம்பிக்கையும், சுய மரியாதையும், வளர்க்கும் சந்தர்ப்பம்.
4 குறும்பு நிறைந்த காலம்.

10 கீழே தரப்பட்டுள்ள கூற்றுக்களை ஏற்றுக் கொள்கின்றீர்களா?

1 ஆசிரியரது பங்களிப்பு அறிவினை வழங்குவதாகும். ஆம் இல்லை.
2 ஆசிரியரது பங்களிப்பானது மாணவர்களது முழு ஆளுமை வளர்ச்சியையும் உருவாக்குவதாகும். ஆம்/இல்லை.
3 ஆசிரியர்களது பங்களிப்பானது ஒழுக்கம் நிறைந்த மாண வர்களை உருவாக்குவதாகும். ஆம் இல்லை.
4 ஆசிரியர்களது பங்களிப்பானது மாணவர்களுடன் சிநேக பாவமுடையவராகவும், ஆலோசனை வழங்குபவராகவும் இருத்தலாகும். ஆம்/இல்லை.

விடைகளை இந்த மொடியூலில் இல 10.0 இல் பாருங்கள்.

இப்போது நீங்கள் இம்மொடியூலைக் கற்று முடித்துள்ளீர்கள். இதனை எவ்வளவு தூரம் வெற்றி கரமாகக் கற்று முடித்துள்ளீர்கள் என்பதனை நீங்கள் சமர்ப்பிக்கும் ஒப்படை மூலம் அறியப்படும். அவ்வாறான ஒப்படை கீழே தரப்படுகின்றது. இதற்கான விடையை எழுதித் தொலைக்கல்விப் பிரதேச நிலையத்தில் கையளியுங்கள்.

## 9.0 ஒப்படை

1. (1) "சமூக நட்சத்திரம்" என்பதனால் விளங்கிக் கொள்ளுவது யாது?

(11) சமூக நட்சத்திரமான ஒருவரிடத்தில் காணப் படக்கூடிய இலட்சணங்கள் எவை?
(குறைந்தது 15 இலட்சணங்களாவது தரப்படல் வேண்டும்)

(111) "ஆசிரியர் ஓர் சமூக நட்சத்திரம்" இக்கூற்றினை அடிப்படையாகக் கொண்டு, கீழே தரப்பட் டுள்ள சந்தர்ப்பங்களில் ஆசிரியர் என்ற ரீதியில் உமது கடமைகள் எவை என்பதனை விளக்குக.

1. காலைக்கூட்டம்.
2. விளையாட்டுப்போட்டி.
3. நூல் நிலைய நேரம்.
4. குழுத் தொழிற்பாடுகளின்போது.
5. கல்விச் சுற்றுலா.

## சமூதாய வளர்ச்சி

1. வகுப்பறையில் நாளாந்த ஒழுங்கின்படி செயல்படல்.

1 தனது கடமைகளை எவ் வகையான ஊக்குவித்த லுமின்றி மிகவும் திறம் படச் செயற்படுத்துதல்.

2 சில வேளைகளில் அலட்சிய மாகவிருந்தாலும் சீர் திருத்தத்தைப் பெற விருப்பப்படல்.

3 அடிக்கடி ஞாபகப்படுத்த வேண்டும்.

4 எந்த வகையான முயற் சியுமின்மை.

2 வகுப்பறையிலுள்ள ஏனைய மாணவர்களுடன் கொள் ளும் தொடர்புகள்.

1 மற்றைய மாணவர்களு டன் மகிழ்வோடும் விருப் பதோடும் பழகுவதற்கு ஊக்கமுடைமை.

| 1ம் மாணவன் | 2ம் மாணவன் | 3ம் மாணவன் | 4ம் மாணவன் | 5ம் மாணவன் |
|---|---|---|---|---|
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 2 குறிக்கப்பட்ட சில மாண வர்களுடன் மாத்திரம் நண்பராக இருக்க விரும் புதல். | | | | | |
| 3 தேவையேற்படும் போது மாத்திரம் கதைத்தல். | | | | | |
| 4 தொடர்புகளை ஏற்படுத்து வதில் எதுவித விருப்ப மும் காட்டாமை. | | | | | |
| 3 வகுப்பறைச் செயற்பாடுகளில் ஒத்துழைப்புடன் செயலாற் றுதல். | | | | | |
| 1 ஆகக் கூடிய அளவில் ஒத் துழைப்பு வழங்கல். | | | | | |
| 2 தனக்கு விருப்பம் ஏற் படும் சந்தர்ப்பத்தில் மாத் திரம் ஒத்துழைத்துச் செயற்படுதல். | | | | | |
| 3 ஊக்கமளித்த போது மாத்திரம் ஒத்துழைப்பு வழங்கல். | | | | | |
| 4 எந்த வகையான விருப் பமும் காட்டாமல் ஒரு பக்கத்தில் ஒதுங்கிக் கொள்ளல். | | | | | |
| 4 பொதுச் சொத்துக்கள் மற்ற வர்கள் சொத்துக்கள் பற்றிய நன் மனப்பாங்குகள். | | | | | |
| 1 வகுப்பறையிலுள்ள தள பாடங்களையும் ஏனைய மாணவர்களின் பொறுப் புக்களையும் பேணிப்பாது காத்தல். | | | | | |
| 2 தனக்குச் சொந்தமான பொருட்களில் மாத்திரம் கவனம் செலுத்துதல். | | | | | |
| 3 பொதுச் சொத்துக்களைத் தான் மாத்திரம் பயன் படுத்த விரும்புதல். | | | | | |
| 4 மற்ற மாணவர்களின் சொத்துக்கள் பற்றி எவ் வித அக்கறையும் கிடை யாமை. | | | | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 5 சிறு அளவிலான பொறுப்புக்களை ஏற்றுக் கொள்ளல். | | | | | |
| 1 மிக விருப்புடன் முன்வருதல். ஒப்படைத்த பொறுப்புக்களை சிறந்த முறையில் நிறைவேற்றுதல். | | | | | |
| 2 தானாக முன்வருவதில்லை ஆனால் பொறுப்புக்களை ஒப்படைத்தால் சிறந்த முறையில் நிறை வேற்றுதல். | | | | | |
| 3 பொறுப்பேற்றுக் கொண்டாலும் உரிய முறையில் நிறைவேற்றமாட்டாமை. | | | | | |
| 4 பொறுப்புக்களை ஏற்றுக் கொள்ளச் சிறிதளவேனும் விருப்பமின்மை. | | | | | |
| 6 சுயமாகச் செயற்படும் தன்மை | | | | | |
| 1 ஆசிரியருதவியின்றி வேலை செய்து முடிக்கும் திறமையுடைமை. | | | | | |
| 2 சில சந்தர்ப்பங்களில் ஆசிரியரின் வழி காட்டல்கள் அவசியமாதல். | | | | | |
| 3 எல்லாப் சந்தர்ப்பங்களிலும் ஆசிரியர்களின் வழி காட்டல்களையும். உதவிகளையும் எதிர்பார்த்திருத்தல். | | | | | |
| 7 விளையாட்டுத் திடலில் நடத்தைகள். | | | | | |
| அ.1 குழுவினருடன் சேர்ந்து விளையாட்டில் ஈடுபடுவதற்கு விருப்பம் காட்டுதல் | | | | | |
| 2 தனியாக விளையாடுவதற்கு முனைந்து நிற்றல். | | | | | |
| 3 விளையாடுபவர்களைப் பார்த்துக் கொண்டு மாத்திரமிருத்தல். | | | | | |
| 4 எந்த உற்சாகமுமின்றி ஒதுங்கியிருத்தல். | | | | | |
| ஆ.1 சமாதானமாகவும், ஒத்துழைப்புடனும் விளையாட்டில் ஈடுபடுத்தல், பொறுமையுடனிருத்தல். | | | | | |

2 தோல்வியை அடையும் போது ஓரளவுக்குக் குழப்பம் விளைவித்தல்.

3 தோல்வியை அடையும் போதுமனவேதனை அடைந்து ஒதுங்கிக் கொள்ளுதல்

4 எப்பொழுதுமே கலகம் விளைவித்தல்.

# 10.0 விடைகள்

## முற்சோதனை

1 இல்லை.

2 பல்வேறு சந்தர்ப்பங்களில் சமுதாயச் செயற்பாடுகளினால் ஏற்படும் பலாபலன்கள். பொருத்தமானதும் ஒழுங்குபடுத்தப்பட்டதுமான சமுதாயப் பிரச்சினைகள்.

3 செயற்பாட்டுத் தொகுதியினைச செயற்படுத்துவதன் மூலம் உடல், உள, மனவெழுச்சி வளர்ச்சிகளை ஏற்படுத்தலாம்

4 குழந்தையானது தனது தாயை அறிந்து கொள்வதே முதல் கட்டமாகும்.

5 இ. ஈ.

## செவ்வைபார்த்தல் 1

1 இல்லை.

2 தாயினது குரலினை அறிந்து கொள்ளல்.

3 அ. மற்றவர்கள் தம்மீது செலுத்தும் கவர்ச்சியை உணர்ந்து கொள்வார்கள்.

ஆ. தங்களைச் சுற்றி மற்றவர்கள் சூழ்ந்திருப்பதைப் பார்க்க விரும்புபவர்கள்.

4 அவர்களது சமுதாயச் சூழல் விரிவடைகின்றது. அவர்களது தூண்டற் பேறுகள் விரிவடைகின்றன.

5 தாம் கண்டவற்றையும் கேட்டவற்றையும் பின்பற்றுதல்.

6 விரிவானவுலகில் சமுதாயத் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்வதற்கு இது அடித்தளமாக அமைகின்றது. இதன் மூலம் சமுதாயத்தில் சுய நம்பிக்கையை வளர்த்துக் கொள்கின்றனர். அவ்வாறான சந்தர்ப்பங்களில் முழுவுலகத்தையும் பற்றிய கருத்துக்களையும் மனவெழுச்சிகளையும் மனக் பாங்குகளையும் உருவாக்கிக் கொள்கின்றனர்.

7 தன்னை மையமாகக் கொண்டிருந்த பிள்ளையானது அறிவினைப் பெற்றதோடு, மற்றவர்களுடன் அறிவோடு கூடிய தொடர்புகளையு மேற்படுத்தி, சூழலுக்கேற்பத் தன்னை மாற்றியமைத்து தனி மனிதனை வளர்ச்சியடைவதைக் காணலாம்.

## செவ்வைபார்த்தல் 2

1 தன்னைப் பற்றியே சிந்திப்பவர்.

2 குழந்தை நாலு வயதையடையும் போது.

3 10 வயது கடந்த பின்னர்.

4 அவர் தனது விளையாட்டுப் பொருட்களை மற்றவர்களுக்கு வழங்காது தாமே வைத்து விளையாடுவது.

5 மூன்று வயதை அடையும்போது.

6 அவர்களெல்லாம் ஓரிடத்திலிருந்தாலும் தனித்தனியாக விளையாடுவார்கள்.

7 குழுக்களாக இணைந்து விளையாட்டுப் பொருட்களைத் தம்முள்ப் பங்கிட்டு ஒத்துழைப்புடன் விளையாடுதல்.

## செவ்வைபார்த்தல் 3

1 பாடசாலையில் சேர்ந்து கொண்ட போது.

2 செயற்பாடுகள் மூலமும், சூழ்லின் தூண்டற் பேறுகள் மூலமும்.

3 தலைமைத்துவம் வகிக்கக் கூடியவர்களுக்குச் சந்தர்ப்பங்களை வழங்கியதனை விருத்தி செய்தல் வேண்டும்.

4 மாணவர்களிடையே கூடி வாழும் பயிற்சியை வழங்கல்.

5 சமுதாயத்தில் பெரிதும் மக்களால் விரும்பப்படுபவர், சமுதாயத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்ட நபர்.

6 சமுதாயத்தால் ஒதுக்கப்பட்டவராகக் காணப்படல்.

7 அவர் சமுதாயத்தை வெறுப்பவர்களாகவும்தோல்வி அடைந்தவராக எண்ணத் தொடங்குகின்றார்.

8 சமவயதுக் குழு.

9 சமுதாயத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்ட செயற்பாடுகள்.

10 சமுதாயத்தால் ஏற்றுக் கொள்ளப்படாத செயற்பாடுகளும், சமுதாயத்துக்குத தீங்கு விளைவிக்கும் செயற்பாடுகளும்.

**செவ்வைபார்த்தல் 4**

1 சமுதாயத்தை ஆழமாக ஆராய்தல். சுய நம்பிக்கையை வளர்த்தல், சமுதாயத்தில் தன் பங்களிப்பினை வழங்க முன் வருதல்.

2 எதிர்பாலாருக்கிடையே தொடர்புகளில் சிக்கல்கள் ஏற்படும்போது.

3 பொருத்தப்பாடு ஏற்படுதல்-பிரச்சனைகளேற்படுதல்.

4 ஒரு தனிப்பட்ட குழுவினர் செய்யும் செயல் முறைகளைப் பெற்றிருப்பதோடு அதனைப் பின்பற்றுகின்றனர்.

5 கட்டிளமைப் பருவத்தினர் தாமாகவும் சுதந்திரமாகவும் செயற்பட விரும்புவதால்.

6 தமக்குரிய முடிவுகளைத் தாமே மேற் கொள்ளும் சுதந்திரம்.

**பிற்சோதனை 1**

1 பல கட்டங்களில் மேற் கொள்ளப்பட்ட செயற்பாடுகளின் விளைவுகள்.

2 பொருத்தமானதும் ஒழுங்குபடுத்தப்படாதுமான சமுதாயச் செயற்பாட்டுத் தொகுப்பினைச் செயற்படுத்துவதின் மூலம் உள, மனவெழுச்சி வளர்ச்சிகளை ஏற்படுத்தால்.

3 2.

4 4.

5 3.

6 3.

7 4.

8 சமூகமானது, சமூகமானமற்றது.

1, 3, 5, 6, 9. 2, 4, 7, 8,10.

9 3.

10 1 இல்லை.

2 ஆம்.

3 இல்லை.

4 ஆம்.

குறிப்பு

குறிப்பு

ஆசிரியர் தொலைக் கல்விப் பாடநெறி

OFFSET BY THE PACIFIC PRESS (PVT) LTD.